1] ஹரியானா மாநில காவலர்களுக்கு வார விடுமுறை வழங்கப்படும் என அம்மாநில முதல்வர் மனோகர்லால் கட்டார் அறிவித்துள்ளார்.

2] Kalvari Scorpene
==========
.
உள்நாட்டுத் தயாரிப்பில் "ஸ்கார்பீன்' ரகத்தில் உருவாகியுள்ள "கல்வாரி' நீர்மூழ்கி போர்க்கப்பல் மும்பை கடற்படைத் தளத்தில் இருந்து பரிசோதனைக்காக கடலுக்குள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மொத்தம், தற்போது 6 கல்வாரி நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது கப்பல் மட்டுமே சோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சோதனைக்குப் பிறகு, வரும் செப்டம்பர் மாதம் அது கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

தற்போதைய நிலவரப்படி, இந்திய கடற்படையில் 14 நீர்மூழ்கிப் போர்க்கப்பல்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் ரஷிய தயாரிப்பிலான 9 கப்பல்களும், ஜெர்மனி தயாரிப்பிலான 4 கப்பல்களும் அடங்கும். இந்தியத் தயாரிப்பிலான ஒரு கப்பல் மட்டுமே உள்ளது.

இந்தியாவின் முதலாவது அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலான "அரிஹந்த்' ஏற்கெனவே சோதனை ஓட்டத்தில் உள்ளது. இது விரைவில் கடற்படையில் சேர்க்கப்பட உள்ளது.

3] சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்றிதழ் செல்லுபடியாகும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகளாக நீட்டிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4] தெலங்கானா மாநில விலங்குகள் நல மண்டலியின் உறுப்பினராக நடிகை அமலா தேர்ந்தெடுக்கபட்டுள்ளார்.

தெலங்கானா மாநிலத்தில் விலங்குகள் நலனைப் பாதுகாக்க அம்மாநில கால்நடைத் துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு ஒரு மண்டலியை அம்மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

அதில் நடிகை அமலா, மாநில டிஜிபி, மாநில தலைமை செயலர், சென்னையைச் சேர்ந்த பாரத விலங்குகள் நல மண்டலியின் தலைவர் உள்பட 13 பேர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கபட்டுள்ளனர்.

அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு, இந்த மண்டலி விலங்குகள் நலத்துக்காக ஏற்படுத்தப்பட்ட பிசிஏ சட்டம் 1960-ஐ கட்டாயமாக அமல்படுத்தத் தேவையான ஆலோசனைகளை தெலங்கானா அரசுக்கு அளிக்கும்.

5] அமெரிக்காவில் பிரதான அரசியல் கட்சியான குடியரசுக் கட்சியின் தேசிய செயற்குழுவில் இந்திய வம்சாவளியினரான ஹர்மீத் கௌர் தில்லானுக்கு தேசிய செயற்குழு உறுப்பினர் என்னும் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய மதத்தைச் சேர்ந்தவரான ஹர்மீத், சண்டீகரில் பிறந்தவர் ஆவார்.

பின்னர், பெற்றோருடன் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்த அவர், அந்நாட்டிலேயே படித்து, வழக்குரைஞரானார். தற்போது, கலி:ஃபோர்னியா நகரில் வசித்து வருகிறார்.

கலிஃபோர்னியா மாகாண குடியரசுக் கட்சியின் மாநாடு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அப்போது, தேசிய செயற்குழு உறுப்பினராக ஹர்மீத் கௌர் தில்லான், ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டார்

6] மத்திய ஆப்பிரிக்க நாடான செக் குடியரசுக்கு (Czech Republic) நிர்வாக வசதிக்காக "செக்கியா' (Czechia) என்று புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இனி அதிகாரப்பூர்வ "செக் குடியரசு' என்ற பெயருடன், "செக்கியா' என்ற பெயரிலும் அந்த நாடு அழைக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

7] இந்திய மருத்துவ கவுன்சிலை { Medical Council of India (MCI)} சீரமைப்பது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்கு முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி R.M. லோதா தலைமையில் மூவர் குழுவை உச்சநீதிமன்றம் நியமனம் செய்துள்ளது.

.

முன்னாள் மத்திய கணக்கு தணிக்கை அதிகாரி { Comptroller and auditor general (CAG) } வினோத் ராய் மற்றும் டாக்டர். சரீன் ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

.

நீதியரசர் R.M. லோதா அவர்கள் ஏற்கனவே IPL சூதாட்ட புகார் குறித்தும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தை சீரமைப்பது பற்றிய பரிந்துரைகளை வழங்குவதற்கும் உச்சநீதிமன்றத்தால் பணி நியமனம் செய்யப்பட்டு இருந்தார்.

8] நடப்பு நிகழ்வுகள் வினாக்கள், விடைகள்

---

1) ஏப்ரல் 01, 2016 அன்று முதல் தமிழக வானிலை இயக்குநராக பதவியேற்றவர் யார்?

2) சர்வதேச சிறுவர் புத்தக தினம் மற்றும் உலக மன இறுக்க விழிப்புணர்வு நாள் ஆகிய தினங்கள் கொண்டாடப்படும் நாள் எது?

3) ஆசியாவின் மிகப்பெரிய ஆப்டிகல் டெலஸ்கோப்பான ARIES (Aryabhatta Research Institute of observational sciences) அமைக்கப்பட்டுள்ள இடம் எது?

4) மத்திய மனிதவளா மேம்பாட்டுத்துறை அமைச்சகம் இந்திய தரவரிசை 2016 என்ற தலைப்பில் நாட்டில் செயல்படும் கல்வி நிலையங்களில் மருந்தியல் பிரிவில் எந்த மாநில அறிவியல் கல்லூரியானது முதல் இடம் பிடித்தது?

5) உலகில் முதல் வெள்ளை புலிகள் சரணாலயம் தொடங்கப்பட்டுள்ள இடம் எது?

6) அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்ற RED FLAG EXERCISE 2016 என்ற போர் பயிற்சியில் இந்தியாவின் போர் விமானங்கள் எத்தனையாவது முறையாக பங்கேற்றன?

7) இந்தியாவின் முதல் அதிவேக இரயிலான கதிமன் இரயிலானது டெல்லி-ஆக்ரா இடையேயான தொலைவை எத்தனை நிமிடங்களில் சென்றடையும்?

8) The Balikatan Exercise (தோளோடு தோள் பயிற்சி) என்ற ராணுவ பயிற்சியானது எந்த இரு நாடுகளுக்கிடையே ஏப்ரல் 04 முதல் 14 வரை நடைபெற்றது?

9) இந்தியாவில் முதன் முதலில் ஆதார் ஏடிம் (ADHAR ATM) அறிமுகம் செய்த வங்கி எது?

10) Stand Up India - என்ற திட்டம் தொடங்கப்பட்ட இடம் எது?

11) ரிசர்வ் வங்கி இந்த ஆண்டின் முதல் அறிக்கையின் படி ரிப்போ ரேட்டானது எத்தனை சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?

12) ASHRAY - என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?

13) தேசிய கடல்சார் தினம் கொண்டாடப்படும் நாள் எது?

14) Standing Guard - A Year in Opposition - என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

15) ஆதர்ஸ் வித்லாயா என்ற திட்டத்தை துவங்கியுள்ள இந்திய மாநிலம் எது?

16) இந்திய - பாகிஸ்தான் எல்லை பாதுகாப்பை பலப்படுத்துவது பற்றிய பரிந்துரைகளை வழங்குவதற்கு மத்திய அரசானது யாருடைய தலைமையில் குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது?

17) CAT - (Central Administrative Tribunal) - என்ற அமைப்பின் தலைவராக தற்போது பதவியேற்றுள்ளவர் யார்?

18) First North East Asean Business Summit - மாநாடு நடைபெற்ற இடம் எது?

19) இந்தியாவில் சிறந்த சிற்றுலாத்தலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள சுற்றுலாத்துறை எது?

20) ஆசிய வணிக உலகின் ஆற்றல் மிக்க பெண்மணிகள் பட்டியலில் முதல் இடம் பிடித்த பெண்மணி யார்?

21) 2016 ஆம் ஆண்டின் இந்திய அழகியாக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

22) பத்திரிக்கைகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றிய விளம்பரங்களை உருவாக்குவதற்கு மத்திய அரசனாது யார் தலைமையில் குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது?

23) Wheels Behind the veil - Pms, Cms and Beyond - என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

24) பிரிட்டனின் மிக உயரிய விருதான புவுண்ட்டர்ஸ் விருது தற்போது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

25) தமிழக பல்கலைக்கழகங்களில் முதன் முறையாக ஆன்லைனில் தேர்வு எழுதும் முறையை அறிமுகம் செய்துள்ள பல்கலைக்கழகம் எது?

26) 53 உறுப்பு நாடுகளை கொண்ட காமன்வெல்த் அமைப்பின் முதல் பெண் பொதுச்செயலாளராக பொறுப்பேற்றவர் யார்?

27) சார்க் நாடுகளின் 3வது வேளாண்துறை அமைச்சர்கள் கூட்டம் ஏப்ரல் 07 அன்று எங்கு நடைபெற்றது?

28) 2016 ஆண்டுக்கான UNESCO / Guillermo Cano world press freedom prize விருதை பெற்றவர் யார்?

29) காவல் மற்றும் மேம்பாட்டு துறையின் {Bureau of police research and development} டைரக்டர் ஜெனரலாக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

30) தற்போது G7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாடு எங்கு நடைபெற்று முடிந்தது?

31) மனித விண்வெளி பயணத்துக்கான சர்வதேச நாளாக கொண்டாடப்படும் நாள் எது?

32) ஏப்ரல் 12 - 14 வரை புலிகளை காப்பது பற்றிய ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான 3வது மாநாடு எங்கு நடைபெற்றது?

33) India's War the making of modern south asia 1939 - 1945 என்ற நூலை எழுதியவர் யார்?

34) முதலாவது தேசிய பழங்குடியினர் திருவிழா (First National Tribal Carnival) நடைபெற்ற இடம் எது?

35) 2016 ஆண்டின் Water Film Festival விழா நடைபெற்ற இடம் எது?

36) தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்ட குருகிராம் என்ற தொழில் நகரம் அமைந்துள்ள மாநிலம் எது?

37) தற்போது ஆந்திர மாநிலத்தின் சுற்றுலாத்துறையின் விளம்பர தூதுவர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் யார்?

38) 2015 ஆண்டின் சரஸ்வதி சம்மான் விருது யாருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது?

39) ஏப்ரல் 13 அன்று ஐ.நா சபையில் அம்பேத்கரின் எத்தனையாவது பிறந்த நாளானது முதன் முறையாக கொண்டாடப்பட்டது?

40) மலிவு விலை காது கேட்கும் கருவியை கண்டறிந்த இந்திய வம்சாவளி மாணவனின் பெயர் யாது?

.

விடைகள்:

.

1) எஸ்.பாலச்சந்திரன்

2) ஏப்ரல் 2

3) உத்தர்கண்ட் மாநிலம் - நைனிடால் மாவட்டம் - தேவஸ்தல் நகர்

4) மணிப்பால் மருந்தியல் அறிவியல் கல்லூரி

5) மத்தியபிரதேசம் மாநிலம் - சாத்னா மாவட்டம் - முகுந்த்பூர்

6) 2 வது முறையாக (இதற்கு முன் 2008 ஆம் ஆண்டு பங்கேற்றன)

7) 100 நிமிடங்கள் (01 மணி 40 நிமிடங்கள்)

8) அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ்

9) மகாராஷ்டிராவை சேர்ந்த DCB வங்கி

10) டெல்லி அருகில் உள்ள நொய்டா

11) 0.25% குறைத்து 6.50% நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

12) ராஜஸ்தான்

13) ஏப்ரல் 05

14) முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்

15) ஒடிசா

16) மதுக்கர் குப்தா

17) ஓய்வு பெற்ற நீதியரசர் பிரமோத் கோலி

18) மணிப்பூர் - இம்பால்

19) கர்நாடகா மாநிலம் - கார்வார் - தண்டெலி
சுற்றுலாத்துறை

20) நீட்டா அம்பானி

21) பிரியதர்ஷினி சட்டர்ஜி

22) B.B.தாண்டன்

23) P.V.R.K.பிரசாத்

24) அன்னை தெரேசா

25) சென்னை பல்கலைக்கழகம்

26) பெட்ரிசியா ஸ்காட்லாண்ட்

27) டாக்கா (வங்காளதேசம்)

28) அசர்பைஜான் நாட்டை சேர்ந்த புலனாய்வு
செய்தியாளர் Khadija Ismayilova

29) Ms.Meeran C.Borwankar IPS

30) ஜப்பான் - ஹீரோஷிமா நகர்

31) ஏப்ரல் 12

32) புது டெல்லி

33) ஸ்ரீநாத் ராகவன்

34) புது டெல்லி

35) புது டெல்லி

36) ஹரியானா மாநிலம்

37) அஜய் தேவகன் மற்றும் அவர் மனைவி காஜல் அகர்வால்

38) திருமதி.பத்மா சச்தேவ்

39) 125 வது பிறந்த நாள்

40) முகுந்த் வெங்கட கிருஷ்ணன்

9] செப்டம்பர் 22 முதல் 24 / 2016வரை ஊட்டியில் சர்வதேச தேயிலை மாநாடு (International Tea Convention) நடைபெறவுள்ளது.

10] செய்திதுளிகள்
==========
.

01) தலைநகர் டெல்லியில் பெட்ரோல் மற்றும் டீசலில் ஓடும் டாக்ஸிகளை மே 01 முதல் இயக்க கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது ஆல் இண்டியா பர்மிட்' பெற்றுள்ள டாக்ஸிகளுக்குப் பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

.

02) பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள (ஆண்டுக்கு 6 லட்சத்துக்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த) பொதுப் பிரிவினருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் 10% இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்று குஜராத் அரசு மே 01ல் அறிவித்துள்ளது.

.

03) போலிப்பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடத்தில் சீனா இருப்பதாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஒஇசிடி) நடத்திய ஆய்வில் தெரிய வந்திருக்கிறது.

சீனாவைத் தொடர்ந்து துருக்கி, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியா ஐந்தாவது இடத்தில் இருக்கிறது.

.

04) ஜே.என்.யூ. மாணவர் தலைவர் கண்ணய்யா குமார் 'பிஹாரிலிருந்து திஹாருக்கு' என்ற தலைப்பில் புதிய புத்தகம் ஒன்றை எழுதவிருக்கிறார்.

.

05) இந்தியாவில் 2017-ம் ஆண்டு முதல் விற்பனையாக உள்ள மொபைல்போன்கள் அனைத்திலும் அவசரகால அழைப்பு பொத்தான் வசதி (Panic Button) அறிமுகப் படுத்தப்படும்.

அதேபோல 2018-ம் ஆண்டிலிருந்து விற்பனைக்கு வர உள்ள செல்போன்கள் அனைத்திலும் செல்போன் உபயோகிப்பாளர் எந்த இடத்தில் இருக்கி றார் என்பதைக் காட்டும் ஜிபிஎஸ் வரைபட வசதியுடன் வெளியாகும் என இந்திய தொலைத் தொடர்புத்துறை அறிவித்துள்ளது.

11] கோமகட்டா மாரு சம்பவம் (Komagata Maru Incident)

==========

.

102 ஆண்டுகளுக்கு முன்பு, கடந்த 1914 மே 18ம் தேதி 376 சீக்கிய அகதிகள் " கோமகட்டா மாரு " என்னும் சிறிய ஜப்பானிய கப்பல் மூலம் கனடாவின் வான்கோவர் துறைமுகத்துக்கு சென்றனர்.

அவர்களில் 24 பேரை மட்டுமே கனடா அரசு ஏற்றுக் கொண்டது. மீதமுள்ள 352 பேரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியது.

கொல்கத்தா திரும்பிய அவர்களை பிரிட்டிஷ் ராணுவம் கைது செய்தது. அப்போது ஏற்பட்ட மோதலில் 22 பேர் கொல்லப்பட்டனர். சிலர் கடலில் குதித்து தப்பினர். இதர அகதிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கோமகட்டா மாரு சம்பவம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த துயர சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்து, மே 18 அன்று கனடா நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக மன்னிப்பு கோருவேன் என தற்போதைய கனடா பிரதமர் ஜஸ்டின் அறிவித்துள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் அமைச்சரவையில் 4 சீக்கிய அமைச் சர்கள் இடம்பெற்றுள்ளனர்.

12] Pradhan Mantri Ujjwala Yojana (PMUY)

.

நாடு முழுவதும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 5 கோடி ஏழை குடும்பங்களுக்கு இலவச சமையல் காஸ் இணைப்பு வழங்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி, உத்தரப்பிரதேசம் மாநிலம், பாலியா நகரில் மே 01ல் தொடங்கிவைத்துள்ளார்.

இதன்படி முதல் ஆண்டில் 1.5 கோடி குடும்பங்களுக்கு இலவச காஸ் இணைப்புகள் வழங்கப்படும். அடுத்த 3 ஆண்டுகளில் 5 கோடி குடும்பங்களுக்கும் காஸ் இணைப்பு கொடுக்கப்படும்.

திட்ட மதிப்பு - 8000 கோடி ரூபாய்.

இந்த திட்டத்தின் முழக்கம் - Swachh Indhan, Behtar Jeevan

13] ADMM PLUS EX MS & CT

==========

.

ASEAN DEFENCE MINISTERS MEETTING PLUS EXERCISE ON MARITIME SECURITY AND COUNTER TERRORISM

.

புரூணை, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தியா, ரஷ்யா, சீனா, ஆஸ்திரேலியா, வியட்நாம், இந்தோனேசியா, மியன்மார், மலேசியா, ஜப்பான், தென்கொரியா மற்றும்அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து கடல்சார் பாதுகாப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு போர் பயிற்சியில் புரூணை நாட்டில் மே 01 முதல் 09 வரை ஈடுபட்டுள்ளன.

14] அமெரிக்காவில், Inside Climate News பத்திரிகையில் பணிபுரியும் இந்திய வம்சாவளியச்சேர்ந்த நீலா பானர்ஜிக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா Edgar A Poe என்னும் விருது வழங்கி கவிரவித்துள்ளார்.

15] ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு, மே தினத்தன்று உழைக்கும் மக்களுகாக " சந்திரண்ணா பீமா யோஜனா " (Chandranna Bima Yojana) என்னும் விபத்து காப்பீடு திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

16] ஹரியான மற்றும் பஞ்சாப் மாநில வனத்துறையினர் ரயில்வேதுறையுடன் இணைந்து இருப்புப்பாதையின் (RAIL TRACK) இருபுறமும் ரயில்வேதுறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க ஒப்பந்தம் செய்துள்ளன.

17] நியூசிலாந்து நாட்டின் 5 டாலர் நோட்டு, 2015ம் ஆண்டின் உலகின் சிறந்த வங்கிநோட்டு விருதை (Banknote of the Year Award for 2015) The International Bank Note Society (IBNS)யிடமிருந்து பெற்றுள்ளது.

18] மே - 3 உலக மூச்சிறைப்பு நோய் தினம் (உலக ஆஸ்த்மா தினம்)

.

(ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் செவ்வாய்கிழமையன்று உலக ஆஸ்த்மா தினம் கடைபிடிக்கப்படுகிறது)

.

2016ன் கருப்பொருள் (Theme) - You Can Control Your Asthma

19] மே - 3 உலக பத்திரிகை சுதந்திரம் நாள் (World Press Freedom Day)

2016ன் கருப்பொருள் (Theme) : Access to Information and Fundamental Freedoms - This Is Your Right!

20] 01) 103வது இந்திய அறிவியல் மாநாடு 2016 நடைபெற்ற இடம்?

02) புலிகளை காப்பது பற்றிய ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான 3வது மாநாடு (3rd Ministerial Conference on Tiger Conservation)நடைபெற்ற இடம்?

03) 2016க்கான அறிவுசார் சொத்து [IP-Intellectual Property] விருது பெற்ற கல்வி நிறுவனம் எது ?

04) 19வது தேசிய மின் ஆளுமைக்கான கூடுகை நடைபெற்ற இடம் எது?

05) 2016ம் ஆண்டிற்கான கிரிஷி கர்மான் விருது வென்ற மாநிலம் எது ?

06) கடல்சார் உச்சி மாநாடு 2016 நடைபெற்ற இடம் எது?

07) குழந்தை தத்தெடுப்பு பற்றிய வடகிழக்கு மாநிலங்கள் பிராந்திய மாநாடு நடைபெற்ற இடம் எது?

08) 19வது சார்க் மாநாடு நடைபெறவுள்ள இடம் எது ?

09) தேசிய குடும்ப கட்டுப்பாடு மாநாடு நடைபெற்ற இடம் எது ?

10) இந்தியாவில் Make in India மாநாடு நடைபெற்ற இடம் எது?

11) இந்தியாவிற்கு வெளியே Make in India மாநாடு நடைபெற்ற இடம் எது?

12) 13வது ஐரோப்பிய - இந்திய மாநாடு நடைபெற்ற இடம்?

13) 2016க்கான G20 மாநாடு நடைபெறவுள்ள இடம் எது ?

14) சர்வதேச மொபைல் போன் மாநாடு நடைபெற்ற இடம் எது?

15) உலக பூஜ்ஜியமாநாடு 2016 நடைபெற்ற இடம் எது ?

16) BRICS நட்பு நகரங்கள் மாநாடு நடைபெற்ற இடம் எது ?

17) 4வது அணு ஆற்றல் மாநாடு நடைபெற்ற இடம் எது?

18) சர்வதேச மூங்கில் மாநாடு நடைபெற்ற இடம் எது?

19) G7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாடு நடைபெற்ற இடம் எது ?

20) வடகிழக்கு ஆசிய நாடுகளுக்கான வணிக மாநாடு நடைபெற்ற இடம் எது?

21) 4வது உலக உயிர்கோள பாதுகாப்பு மாநாடு நடைபெற்ற இடம் எது ?

22) சர்வதேச பூர்வகுடி - பழங்குடியின (International Indigenous Terra Madre) மாநாடு நடைபெற்ற இடம் எது?

23) 2016க்கான இஸ்லாமிய உச்சி மாநாடு நடைபெறவுள்ள இடம் எது?

24) 4வது இந்திய-ஆப்பிரிக்க ஹைட்ரோ கார்பன் மாநாடு நடைபெற்ற இடம் எது?

25) முதலாவது உலக சூஃபி மாநாடு நடைபெற்ற இடம் எது?

26) முதலாவது ரைசினா பேச்சுவார்த்தை மாநாடு (First Raisina - Dialogue 2016) நடைபெற்ற இடம் எது?

27) 43வது ஸ்காட்ச் மாநாடு நடைபெற்ற இடம் எது?

28) இந்திய அரசு மற்றும் IMF இணைந்து நடத்திய "Advaning Asia" மாநாடு நடைபெற்ற இடம் எது ?

.

.

விடைகள்

=========

.

01) மைசூரு

02) புதுடில்லி

03) IIT காரக்பூர்

04) நாக்பூர் - மஹாராஷ்டிரா

05) மேகலாயா

06) மும்பை

07) ஷில்லாங்

08) இஸ்லாமாபாத்

09) டெல்லி

10) மும்பை (பிரதமர் மோடி கலந்து கொண்டுள்ளார்)

11) சிட்னி (ஆஸ்திரேலியா) { நிதியமைச்சர் அருண் ஜெட்லி கலந்து கொண்டுள்ளார்}

12) பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்

13) சீனா

14) பார்ச்சிலோனா ஸ்பெயின்

15) பிரான்ஸ் தலைநகர் பாரிஸ்

16) மும்பை

17) வாஷிங்டன், அமெரிக்கா

18) இந்தூர்,மத்திய பிரதேசம்

19) ஹிரோஷிமா, ஜப்பான்

20) இம்பால்,மணிப்பூர்

21) லிமா, பெரு

22) மேகாலயா

23) துருக்கி

24, 25, 26, 27 & 28) புது டெல்லி

21] 22nd CORPAT (Indo -Thai Coordinated Patrol)

.

இந்தியா மற்றும் தாய்லாந்து கடலோர காவல்படைகள் இணைந்து மேற்கொள்ளும் ரோந்து பயிற்சி 22வது CORPAT (Indo -Thai Coordinated Patrol), அந்தமான் கடற்பரப்பில் ஏப்ரல் 19 முதல் 27 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

22] இந்திய தேர்தல் ஆணையம், கேரளா மாநில சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு e - voter என்னும் அலைபேசி செயலியை (mobile app) வெளியிட்டுள்ளது.

23] ஏப்ரல் - 29 சர்வேதேச நாட்டிய தினம்

24] ஆந்திர மாநிலம் விசாகபட்டினம் கடற்கரையிலிருந்து 45 கடல் மைல் தொலைவில் வங்காள விரிகுடா கடலில் ஐஎன்எஸ் அரிஹந்த் நீர் மூழ்கி கப்பலில் இருந்து, ஏப்ரல் 14 அன்று அணுகுண்டை தாங்கிச் செல்லும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. (கடலுக்கு அடியில் 20மீட்டர் ஆழத்தில் இருந்து ஏவப்பட்டுள்ளது.)

இந்த ஏவுகணைக்கு ரகசிய குறியீடாக K - 4 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த வகை ஏவுகணைகள் 2 ஆயிரம் கிலோ எடை கொண்ட அணுகுண்டை தாங்கி சென்று 3500 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இலக்கையும் தாக்கும் திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இது போன்ற வசதி அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, சீனா போன்ற ஒரு சில நாடுகளுக்கே உள்ளது.

25] பாபுவா நியு கினியா நாட்டின், வெஸ்ட் நியு பிரிட்டன் மாகாணத்தின் கவர்னராக தமிழகத்தை பூர்விகமாக கொண்ட சுசீந்திரன் முத்துவேல் பதவியேற்றுள்ளார்.

.

இவரது பூர்வீகம் சிவகாசி

26] இந்தியாவிலேயே முதன்முறையாக, மேற்கு வங்காள சட்டமன்ற தேர்தலில் ரியா சர்கார் என்ற திருநங்கை வாக்குச்சாவடி தேர்தல் அலுவலராக பணியாற்றியுள்ளார்.

தெற்கு கொல்கத்தாவில், ரஷ்பீஹாரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட Ballygunge Government High Schoolஇல் அமைக்கபட்ட வாக்குச்சாவடியின் தேர்தல் அலுவலராக ஏப்ரல் 30அன்று பணியாற்றியுள்ளார்.

27] கேரளாவின் கோழிக்கோடு மாவட்ட ஆட்சியரால் அரசு சாரா திட்டமாக Operation Sulaimani என்னும் திட்டத்தை துவக்கியுள்ளார்.

இத்திட்டத்தின்படி மாவட்டத்தில் உள்ள மக்கள் எவரும் உணவின்றி உறங்க கூடாது என்பதேயாகும்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாலுகா மற்றும் கிராம அலுவலங்களில் டோக்கன் பெற்று குறிப்பிட்ட உணவகங்களில் இலவசமாக உணவருந்திகொள்ளலாம்.

28] பாகிஸ்தானை சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் தபஸ்ஸம் அட்னன் (Tabassum Adnan) 2016ம் ஆண்டுக்கான Nelson Mandela - Graca Machel Innovation விருது பெற்றுள்ளார்.

29] ஆப்கானிஸ்தான் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது பற்றிய " 6வது ஆசியாவின் இதயம் மாநாடு " (6th Heart Of Asia Conference) டெல்லியில் ஏப்ரல் 26ல் நடைபெற்று முடிந்துள்ளது.

இதற்கு முன் 5வது மாநாடு 2015 டிசம்பரில் பாகிஸ்தானில் நடைபெற்றுள்ளது.

30] 2018ம் ஆண்டுக்கான காமன்வெல்த் நாடுகளின் ஜூடோ சாம்பியன் போட்டி, ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ளது.

31] 2022ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்துவதற்கான செயல்திட்டங்களை உருவாக்குவதற்கு, மத்திய விவசாயத்துறை கூடுதல் செயலளர் அசோக் தல்வை (Ashok Dalwai) தலைமையில் 8பேர் கொண்ட கமிட்டியை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

32] புலம் பெயர்ந்த திபெத்தியர்களின் பிரதமராக இரண்டாவது முறையாக லப்சங் சங்கி (Lobsang Sangey) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான தலைமை அலுவலகம், இமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்மசாலாவில் அமைந்துள்ளது.

.

சீனாவின் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகள் / இன மக்களின் சார்பில் “Strengthening Our Alliance to Advance the Peoples’ Dream: Freedom, Justice, Equality and Peace” என்னும் தலைப்பில் ஜனநாயக மாநாடு தர்மசாலாவில் ஏப்ரல் 28 முதல் மே 01 வரை நடைபெறுகிறது.

33] இந்தியாவின் பிரத்யேக வழிகாட்டி செயற்கைக்கோளான IRNSS - 1G வெற்றிகரமாக PSLV - C33 ராக்கெட் மூலம் ஏப்ரல் 28ல் விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.

இந்தச் செயற்கைக்கோள்கள் கடல் வழி ஆராய்ச்சிக்காகவும், இயற்கை பேரிடர் காலங்களில் கடல் பயணத்துக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், 1,500 சதுர கிலோ மீட்டர் சுற்றளவு பரப்பளவுக்கு கடல் வழிகளையும், கடல் எல்லைகளையும் கண்காணிக்கும், மேலும், தரையிலும், வான்வெளியிலும் செல்லும் அனைத்து வாகனங்களையும் கண்காணிக்க முடியும்.

கார்கள், சரக்கு வாகனங்கள், விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் இருப்பதைத் துல்லியமாகத் தெரிவிப்பதுடன், பயண நேரம் குறித்துச் சரியான தகவல்களையும் அளிக்கும். மேலும், பேரிடர் மேலாண்மை, செல்லிடப்பேசிகள் ஒருங்கிணைப்பு, புவியியல் வரைபடங்களைக் கண்காணித்தல், கார், கனரக வாகன ("டிரக்ஸ்') ஓட்டுநர்களுக்கு

குரல்வழி மூலம் முறையாக ஓட்டச்சொல்லி வாகனங்களை இயக்க வழிகாட்டும். இது இந்தியாவுக்கான பிரத்யேக வழிகாட்டி செயற்கைக்கோள்.

அமெரிக்காவின் GPS போல இந்தியாவுக்கான GPS. வழிகாட்டியாக இந்தச் செயற்கைக்கோள்கள் அமையும்.

2013-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதி IRNSS -1A செயற்கைக்கோள் PSLV -C22 ராக்கெட்டிலும், 2015-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் தேதி IRNSS - 1B செயற்கைக்கோள் PSLV- C24 ராக்கெட்டிலும், அக்டோபர் மாதம் 16-ஆம் தேதி IRNSS -1C, மார்ச் 28-ஆம் தேதி IRNSS -1D செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன.
2016, ஜனவரி 20-ஆம் தேதி IRNSS -1E செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. மார்ச் 10-ஆம் தேதி ஆறாவது செயற்கைக்கோளான IRNSS -1F விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.

7 செயற்கைக்கோள்களை உள்ளடக்கிய இந்த திட்டத்துக்கு 'நாவிக்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

34] செய்தி துளிகள்

.

01) 62 ஆண்டுகள் ராணியாக வீற்றிருக்கும் பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிசபெத் ஏப்ரல் 21ல் தனது 90-வது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

.

02) வெனிசூலாவில் கடும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுவதையடுத்து, அந்த நாட்டு அரசு அலுவலகங்களுக்கு வாரம் 5 நாள் கட்டாய விடுமுறை அளித்து உத்தரவிட்டுள்ளது.

.

03) மும்பையில், ஆதர்ஷ் வீட்டு வசதி வாரியத்தினால் ராணுவ வீரர்களுக்காக கட்டப்பட்ட 31 மாடிகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பை இடிக்க மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்துக்கு மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராணுவ வீரர்களுக்காக கட்டப்பட்ட இந்தக் குடியிருப்பு விவகாரத்தில் ஊழல் நடைபெற்றதாக கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனையடுத்து வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக மகாராஷ்டிர முதல்வராக இருந்த அசோக் சவான் பதவி விலகினார்.

.

04) இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படையின் (ஐடிபிபி) வடகிழக்குப் பிராந்திய தலைமையகத்தை, மேகாலயத் தலைநகர் ஷில்லாங்கில் இருந்து அருணாசலப் பிரதேசத் தலைநகர் இட்டா நகருக்கு மாற்றத் தொடங்கியுள்ளது மத்திய அரசு.

அருணாசலப் பிரதேச எல்லைப் பகுதிக்குள் சீன ராணுவம் அடிக்கடி அத்துமீறலில் ஈடுபட்டு வருவதையடுத்து, மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்காக, மேகாலயத்தில் இருந்து 2,000 ராணுவ வீரர்களுடன் கனரக வாகனங்கள், ஆயுதங்கள் ஆகியவை சுமார் 500 கி.மீ தொலைவு கடந்து அருணாசலப் பிரதேசத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

.

05) சீனாவில் இருந்து பால், பாலில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்கள், குறிப்பிட்ட சில செல்லிடப் பேசிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

.

06) ஊழியர் வருங்கால வைப்புநிதி மீதான வட்டி விகிதத்தை 0.1% அதிகரித்து மத்திய நிதியமைச்சகம் உத்தரவிட்டுள்ளது

இதன் மூலம் 8.7%-லிருந்து தற்போது 8.8% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (சில மாதங்களுக்கு முன் 8.8%லிருந்து 8.7% ஆக நிதியமைச்சகம் குறைத்திருந்தது)

35] 2016-ம் ஆண்டுக்கான 9-வது மாஸ்கோ மணல் சிற்ப போட்டி ஏப்ரல் 21 முதல் 27 வரை நடைபெற்றது.

இதில், மகாத்மா காந்தியின் படத்தை 15 அடி உயரத்தில் அகிம்சை மற்றும் சமாதான செய்தியைச் சித்தரிக்கும் வகையில் உலக அமைதி என்று மணலில் வடிவமைத்து, இந்தாண்டுக்கான தங்கப்பதக்கத்தை வென்று பட்நாயக் சாதனை படைத்துள்ளார்.

36] சீனாவில் பயங்கரவாதி என்று குற்றம்சாட்டப்பட்ட சர்வதேச உய்குர் கூட்டமைப்புத் தலைவர் துல்குன் இசாவுக்கு இந்தியா வழங்கிய நுழைவு இசைவு (விசா) ரத்து செய்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் பயங்கரவாதி மசூத் அஸாருக்கு எதிராக ஐ.நா.வில் இந்தியா கொண்டு வந்த தீர்மானத்தை சீனா முறியடித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சீனாவால் பயங்கரவாதி என்று குற்றம்சாட்டப்படும் உய்குர் முஸ்லிம் தலைவருக்கு இந்தியா நுழைவு இசைவு வழங்கியது.

இதற்கு, சீனா கடும் கண்டனம் தெரிவித்ததாலும், இன்டர்போல் பட்டியலில், துல்குன் இசா தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருப்பதாலும், இந்தியா இந்த முடிவை எடுத்துள்ளது.

37] டிஎன்ஏ (மரபணு) வடிவமைப்பை பயன்படுத்தி உலகின் மிக நுண்ணிய தெர்மாமீட்டரை (வெப்பமானியை) கனடாவின் மான்ட்ரியல் பல்கலைக்கழக பயோ வேதியியல் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

38] ஐ.நா. பல்கலைக்கழக கவுன்சிலுக்கு டெல்லியைச் சேர்ந்த சிந்தனையாளர் அமைப்பான, டெல்லி கொள்கைக் குழுவின் இயக்குநரும் கல்வியாளருமான திருமதி.ராதா குமார் உட்பட 12 பேரை, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் நியமனம் செய்துள்ளார்.

இந்தியரான ராதா குமார், இன மோதல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது, அமைதியை நிலைநாட்டுவது ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.

ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் அமைதி மற்றும் மோதல் தொடர்பான ஆய்வுகளுக்கான மண்டேலா மையத்தின் இயக்குநராக இவர் பணியாற்றி உள்ளார்.

38] ACE AGAINST ODDS

.

டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவின் வாழ்க்கை வரலாறு புத்தகம் . இந்த நூல் இன்னும் இரு மாதங்களில் வெளிவரவுள்ளது.

.

இந்தியாவின் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களின் சிலரின் வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் பட்டியல்.

.....

01) The Race of My Life:An Autobiography --- மில்கா சிங் (ஓட்டபந்தைய வீரர்)

02) Unbreakable: An Autobiography --- மேரி கோம் (குத்துச்சண்டை வீராங்கனை)

03) Playing to Win --- சாய்னா நேவால் (பாட்மிண்டன் வீராங்கனை)

04) A Shot at History . My Obsessive Journey To Olympic Gold --- அபினவ் பிந்த்ரா (துப்பாக்கி சுடுதல் வீரர்)

05) The Moon Baller --- நிருபமா வைத்தியநாதன் (டென்னிஸ் வீராங்கனை)

06) Golden Girl --- P.T. உஷா (ஓட்டப்பந்தைய வீராங்கனை)

07) The Test of My Life --- யுவராஜ் சிங் (கிரிக்கெட் வீரர்)

08) Sunny Days ---- சுனில் கவாஸ்கர் (கிரிக்கெட் வீரர்)

09) Straight From The Heart --- கபில்தேவ் (கிரிக்கெட் வீரர்)

10) The Nice Guy Who Finished First --- ராகுல் டிராவிட் (கிரிக்கெட் வீரர்)

11) Playing it My way --- சச்சின் டெண்டுல்கர் (கிரிக்கெட் வீரர்)

39] முதலாவது உலக மனிதாபிமான உச்சி மாநாடு (World Humanitarian Summit) மே 23 & 24ல் துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில நடைபெறவுள்ளது.

40] செய்திதுளிகள்

.

01) 15வது உலகத்தமிழ் இணைய மாநாடு, செப்டம்பர் 9, 10 & 11 தேதிகளில் திண்டுக்கல், காந்தி கிராமிய பல்கலைகழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

.

02) ரியல் எஸ்டேட் தொழிலை ஒழுங்குபடுத்தும் விதமாக மத்திய அரசு கொண்டுவந்துள்ள மனை வணிக சட்டம் மே 01 முதல் அமலுக்கு வந்துள்ளது.

.

03) புகழ்பெற்ற "பிட்காயின்' இணையதளப் பணப்பரிமாற்ற சேவை நிறுவனத்தை நிறுவியவர் பற்றி பல ஆண்டுகளாக நீடித்து வந்த மர்மம் விலகி அடையாளம் தெரிந்துள்ளது.

"சடோஷி நாகமாடோ' என்ற புனைப் பெயரில் அந்த நிறுவனத்தை உருவாக்கி நடத்தி வந்தவர், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரெயிங் ரைட் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

41] உத்தரகண்ட் மாநிலம், ஹரித்வாரை தலமையிடமாகக் கொண்டு செயல்படும் "அகில உலக காயத்ரி பரிவார்' என்ற ஆன்மிக அமைப்பின் இயக்குநராக உள்ள டாக்டர். பிரணவ் பாண்ட்யாவை, மத்திய அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களவை உறுப்பினராக நியமனம் செய்து ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் .

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு நியமனம் செய்யும் மாநிலங்களவைக்கான 7-ஆவது உறுப்பினர் பாண்ட்யா ஆவார். இதற்கு முன்பு, பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, குத்துச் சண்டை வீராங்கனை மேரி கோம், மலையாள திரைப்பட நடிகர் சுரேஷ் கோபி உள்ளிட்ட 6 பேர் கடந்த மாதம் 22-ஆம் தேதி மாநிலங்களவை எம்.பி.யாக நியமிக்கப்பட்டனர்.

42] 2013-ம் ஆண்டு டொராண்டோவை மையமாகக் கொண்டு, இந்திய வம்சாவளியை சேர்ந்த தொழில்முனைவோரான வருண் மல்ஹோத்ரா சினெர்ஜி (Synergyse) என்ற ஸ்டார்ட் அப் நிறுவனத்தை தொடங்கினார்.

இந்த நிறுவனம் கூகுள் அப்ளிகேஷன்ஸை எப்படி பயன்படுத்தலாம் என்பது குறித்த பயிற்சிகளை அளிப்பதற்காக தொடங்கப்பட்டது.

தற்போது Synergyse நிறுவனத்தை கூகுள் நிறுவனம் கையகப்படுத்தியுள்ளது.

43] ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் நல்லெண்ணத் தூதராக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே பாலிவுட் நடிகர் சல்மான்கான் மற்றும் துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் பிந்த்ரா ஆகியோர் நல்லெண்ண தூதர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

44] High and Dry : Climate Change, Water, and the Economy என்னும் தலைப்பில் பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள கடும் தண்ணீர் பற்றாக்குறையால், உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பாதிப்பு பற்றிய ஆய்வறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது.

45] பிரதமரின் ஆவாஸ் யோஜனா (Pradhan Mantri Awas Yojana Housing for All 2022) என்ற 'அனைவருக்கும் வீடு' திட்டத்துக்காக 26 மாநிலங்களில் சுமார் 2,508 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக நகர்ப்புறத் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

46] கேரள மாநிலம் பத்தினம்திட்டா மாவட்டத்தில் உள்ள வாக்களர்கள் பெரும்பாலும் வாக்களிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. மாநில அளவில், 75% பதிவாகும் நிலையில், இங்கு, 65%எட்டுவதில்லை.

இதனால் வரும் மே மாதம், 16ம் தேதி நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் இங்கு வாக்கு சதவீதத்தை
அதிகரிக்க சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களித்தால் வாக்களர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும் என பத்தினம்திட்டா மாவட்ட ஆட்சியரும் தேர்தல் அதிகாரியுமான ஹரிகிஷோர் அறிவித்துள்ளார்.
47] கேரளா முதல்வர் உம்மன்சாண்டி அவர்களுடான நகைச்சுவையான சம்பவங்கள் மற்றும் முதல்வர் அலுவலகத்தின் சுவராஷியமான் சம்பவங்களை கேரள முதல்வரின் பத்திரிகை செயலாளர் P.T. சாக்கோ எழுதியுள்ள புத்தகம் --- Kunjoonju Stories (ஆங்கிலத்தில் Tales from Kunjunju)

இதன் இரண்டாம் பாகம் Kunjoonju Kathakal - 2 என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

48] Em and The Big Hoom

இந்த நாவலை எழுதியவர் - Jerry Pinto

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகம் வழங்கும் 2016ம் ஆண்டுக்கான விந்தம் - கேம்பெல் பரிசு (Windham - Campbell Prize) பெற்றுள்ளது.

49] Fixed! Cash and Corruption in Cricket

எழுதியவர் -- Shantanu Guha Ray

50] The Culture Heritage of Trans Himalayas (Kinnaur)

எழுதியவர் -- P.S. Nagi Loktus

51] நடப்பு நிகழ்வுகள் வினாக்கள், விடைகள்

==========

.

01) சமீபத்தில் இந்தியாவுக்கு வருகை தந்த பிரிட்டிஷ் அரசகுடும்பத்தினர் எந்த உயிரியல் பூங்காவை சுற்றிப்பார்த்தனர் ?

02) சமீபத்தில் எந்த விளையாட்டுக்கான தடையை சீனா விலக்கியுள்ளது?

03) அமெரிக்க ராணுவத்தில் முதன்முறையாக தாடி மற்றும் டர்பன் அணிந்துகொள்ள அனுமதி பெற்ற இந்திய வம்சாவளி சீக்கியர் யார் ?

04) எந்த மாநிலத்தில் / நகரத்தில் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது?

05) புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினுக்கு 2016 ஏப்ரலில் அருங்காட்சியகம் எங்கு துவங்கப்பட்டுள்ளது?

06) " கிராம விடியல், பாரதத்தின் விடியல் " என்ற பிரச்சார திட்டத்தை பிரதமர் மோடி எங்கு துவக்கிவைத்துள்ளார்?

07) சமீபத்தில் பிரதமர் மோடி எந்த மாநிலத்தில் பல்நோக்கு மருத்துவமனையை (Multi Speciality Hospital) திறந்து வைத்துள்ளார்? அம்மருத்துவமனையின் பெயர் என்ன ?

08) TWITTER சமூக வலைத்தளம் மேற்கொண்ட பெண்களின் மேம்பாடு பற்றிய பிரச்சாரத்தின் வாசகம் என்ன ?

09) கிராமப்புற அஞ்சலங்களை இணையம் வழியாக இணைப்தற்கு மத்திய அரசு எந்த ஆண்டை இலக்காக நிர்ணயம் செய்துள்ளது?

10) அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும் ரயில்வே இருப்புபாதை குறுக்கீடு இல்லாமல் மேம்பாலங்கள் அமைப்பதற்காக சமீபத்தில் துவக்கப்பட்ட திட்டம் எது?

11) 2016ம் ஆண்டுக்கான புரோ கபடி லீக் சாம்பியன் பட்டம் வென்ற அணி எது ?

12) 2016ம் ஆண்டுக்கான கிரிஷி சிரோமணி சம்மான் விருது பெற்றவர் யார் ?

13) மும்பை பங்குச்சந்தை எனப்படும் BOMBAY STOCK EXCHANGEன் தலைவராக பொறுப்பேற்றுள்ளவர் யார்?

14) சிட்டுக்குருவிகளை பாதுகாக்க விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கிய மாநிலம் எது?

15) ஆந்திர மாநில அரசு அறிமுகம் செய்துள்ள அகன்ற அலைவரிசை திட்டத்தின் பெயர் என்ன?

16) மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்து பத்ம ஸ்ரீ விருது பெற்றுள்ள கவிஞர் யார் ? எந்த மொழி ? எந்த மாநிலம் ?

17) பொது இடங்களில் எச்சில் துப்புபவர்களுக்கு ரூ500 அபராதம் விதிக்கப்படும் என அறிவித்த மாநகராட்சி எது?

18) ராஜஸ்தானின் எந்த கிராமத்தில் முழு மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டுள்ளது?

19) இந்தியாவும் சீனாவும் இணைந்து உருவாக்கியுள்ள யோகா கல்லூரி சீனாவில் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

20) நாட்டிலேயே வருமானவரி பாக்கி வைத்துள்ளவர்கள் அதிகம் உள்ள மாநிலம் எது ? (வருமானவரித்துறை வெளியிட்டுள்ள பட்டியலின்படி)

21) தூய்மை இந்தியா திட்டத்திற்கு பத்தாயிரம் கோடி கடன் வழங்க முன்வந்துள்ள அமைப்பு / வங்கி எது ?

22) சிகரெட் பாக்கெட்டுகளில் எவ்வளவு சதவிகித அளவிற்கு எச்சரிக்கை படம் இடம்பெற வேண்டும் என மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.?

23) சமீபத்தில் எந்த நாட்டின் செயற்கைக்கோள் விண்வெளியில் காணமல்போனது ? அந்த செயற்கைகோளின் பெயர் என்ன ?

24) சமீபத்தில் ஆந்திராவின் கிருஷ்ணபட்டினம் துறைமுகத்திலிருந்து பங்களாதேஷ் நாட்டின் எந்த துறைமுகங்களுக்கு நேரடி கண்டெய்னர் சரக்கு போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது?

25) உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள மானா கணவயை முதன்முதலாக இருசக்கர வாகனம் மூலம் கடந்து லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றவர் யார்?

.

விடைகள்

.

01) அசாமில் உள்ள காசிரங்கா பூங்கா

02) கோல்ப் விளையாட்டு

03) கேப்டன் சிம்ரத்பால் சிங்

04) பெங்களூரில், விதான் சௌதா எதிரே உள்ள மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்படும் என கர்நாடகா மாநில அரசு அறிவித்துள்ளது.

05) சுவிட்சர்லாந்து

06) மத்திய பிரதேசத்தில் உள்ள மாஹூ கிராமம் (அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஊர்)

07) காஷ்மீர் மாநிலம் , ஸ்ரீ மாதா வைஷ்ணவாதேவி நாராயணா சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனை

08) #Position of strength

09) 2017 மார்ச்

10) சேது பாரதம்

11) பாட்னா பைரேட்ஸ்

12) டாக்டர் அம்ரிதா படேல்

13) சுதாகர் ராவ்

14) உத்தரப்பிரதேசம்

15) AP Fiber Net

16) ஹல்தார் நாக் .., கொஸ்லி மொழி .., ஒடிஸா மாநிலம்

17) புனே

18) கச்சபாலி கிராமம்

19) குன்மிங் நகரம் (Kunming city)

20) முதலிடம் - குஜராத் ., இரண்டாமிடம் - மகாராஷ்டிரா ., மூன்றாமிடம் - தெலுங்கனா

21) உலக வங்கி

22) 85 %

23) ஜப்பான் நாடு ..., ஹிட்டோமி செயற்கைக்கோள்

24) சிட்டகாங் மற்றும் பாங்காவோன் துறைமுகங்கள் (எம். பி. ஹார்பர் - 1கப்பல் மூலம்)

25) பல்லவி பஸ்தார்

52] இந்திய வம்சாவளியச்சேர்ந்த சச்சின் தேவ் பவித்ரன், இரண்டாவது முறையாக அமெரிக்காவில் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செயல்படும் Architectural and Transportation Barriers Compliance Board உறுப்பினராக அதிபர் ஒபாமாவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

53] பிரிட்டன் தலைநகர் லண்டன் மாநகர மேயராக, தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்ட சாதிக் கான் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் பாகிஸ்தானில் இருந்து குடிபெயர்ந்த முஸ்லீம் ஆவார்.

54] In the eve of Atshaya trithi , central govt set to launch 2 gold coins. One of the gold coin is in Mahathma Gandhi face in 5 grams and in another one is Ashok chakra in 10 grams

55] மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு - உலக அன்னையர் தினம் . இந்த ஆண்டு மே 8ம் தேதி கடைபிடிக்கப்பட்டுள்ளது.

.

மே 8 - உலக தலசீமியா தினம் (உறவுமுறை திருமணத்தால் அதிகரிக்கும் மரபணு நோய்)

கருப்பொருள் (Theme) - Access to Safe & Effective Drugs in Thalassaemia

.

மே - 8 World Red Cross and Red Crescent Day

56] Asia's first Rice Technology Park

ஆசியாவின் முதலாவது அரிசி தொழில்நுட்ப பூங்காவை கொப்பல் (Koppal) மாவட்டம், கங்காவதி நகரில் கர்நாடகா அரசு அமைக்கிறது.

57] உத்தரகாண்ட் சட்டசபையில் மே 10ல் நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்புக்கான சிறப்பு பார்வையாளராக நாடாளுமன்ற விவகாரங்களுக்கான முதன்மை செயலர் ஜெய்தேவ்சிங்கை நியமித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவருக்கு உதவியாக உத்தரகாண்ட் சட்டசபை செயலரும் வாக்கெடுப்பை கண்காணிப்பர் என உச்சநீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

58] Shashi Kapoor - the Householder, the Star

பழம்பெரும் ஹிந்தி நடிகர் சசி கபூரின் வாழ்க்கை சரிதை நூல்.

கரன் ஜோஹருடன் இணைந்து அசீம் சப்ரா எழுதியுள்ளார்.

59] நாட்டின் மிக முக்கியமான நிதிக் குழுக்களில் ஒன்றாகக் கருதப்படும் நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் (Public Accounts Committee.) தலைவராக காங்கிரஸ் எம்.பி. கே.வி. தாமஸ் மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதற்கு முன்பு 2014, 2015-ஆம் ஆண்டுகளிலும் கே.வி. தாமஸ் நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

22 உறுப்பினர்களைக் கொண்ட இந்த நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவில் 15 பேர் மக்களவையிலிருந்தும், 7 பேர் மாநிலங்களவையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

60] இந்தியா முழுவதும் காவல் துறை, ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்புத் துறை ஆகிய அவசரச் சேவைகள் அனைத்துக்கும் அடுத்த ஆண்டு (2017) ஜனவரி மாதம் 1-ஆம் தேதி முதல் "112' என்ற எண்ணை மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

61] கர்நாடகா மாநிலம், குடகில் தேசிய ராணுவ அகாதெமி தொடங்கப்படும் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர் தெரிவித்துள்ளார்.
62] ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற்ற மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி ஆடவர் பிரிவில் நம்பர் ஒன் வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் நடப்பு சாம்பியனான இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை வீழ்த்தி பட்டம் வென்றுள்ளார்.

இந்த ஆண்டில் ஜோகோவிச் கைப்பற்றும் 5-வது பட்டம் இதுவாகும்.

மாட்ரிட் ஓபனில் ஜோகோவிச் பட்டம் வெல்வது இது 2-வது முறையாகும். கடைசியாக அவர் 2011ல் கோப்பை வென்றிருந்தார்.

மாஸ்டர்ஸ் அந்தஸ்து பெற்ற தொடரில் அவர் வெல்லும் 29-வது பட்டம் இதுவாகும். இதன் மூலம் மாஸ்டர்ஸ் தொடரில் 28 பட்டங்கள் வென்றிருந்த நடாலின் சாதனையை முறியடித்தார்.

63] பிரபல ஹிந்தி பட டைரக்டரும், தயாரிப்பாளருமான யஷ் சோப்ராவின் வெண்கலச்சிலை சுவிட்சர்லாந்து நாட்டில் நிறுவப்பட்டுள்ளது.

64] மஹாராணா பிரதாப்பின் 475வது பிறந்தநாளை முன்னிட்டு மத்திய அரசு ரூ.100 மற்றும் ரூ.10 நாணயங்களை வெளியிட்டுள்ளது.

65] குஜராத் மாநில அரசு ஜெயின் இனத்தை சிறுபான்மையினர் பட்டியலில் சேர்த்துள்ளது.

66] பெங்களூருவில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு INFOSYS நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

67] இந்திய விமானப்படையின் புதிய தலைமை தளபதியாக வைஸ் அட்மிரல் சுனில் லன்பா (Sunil Lanba) மே 31 அன்று பதவியேற்கவுள்ளார். இவர் மூன்று ஆண்டுகளுக்கு இப்பதவியில் இருப்பார் .
.
இவர் 23வது தலைமை தளபதி ஆவார். (2 ஆங்கிலேயர்கள், 21 இந்தியர்கள்)
.
தற்போது தலைமை தளபதியாக உள்ள சீப் அட்மிரல் ராபின் K தோவன் மே 31ல் ஓய்வு பெறுகின்றார்.

68] செய்தி துளிகள்
~~~~~~~~~~~~
.
01) இந்தியாவிற்கான நேபாள தூதர் தீபக் குமார் உபாத்யாயாவை அந்நாடு திரும்ப பெற்றுள்ளது.
.
02) நாட்டிலேயே முதன் முறையாக பயோ டாய்லட் எனப்படும் உயிரி கழிவறைகள் ஏற்படுத்தப்பட்ட பசுமை ரயில் வழித்தடமாக மானாமதுரை முதல் ராமேஸ்வரம் வரை ஆகிறது.
~~~~~~~~~~~~

69] CREATING LEADERSHIP

.

எழுதியவர் - கிரண்பேடி IPS

.

PARAM VIR : A WAR DIARY

.

எழுதியவர் -- மஞ்சு லோதா

70] இந்திய குடிமை பணிகள் தேர்வு - 2015ன் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

டெல்லியை சேர்ந்த டினா தாபி தனது முதல் முயற்சியிலேயே வெற்றிபெற்று அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.

2-வது இடத்தை காஷ்மீரை சேர்ந்த அத்தர் அமீர் உல் ஷபிகான் பெற்றுள்ளார்.

தமிழக அளவில் சரண்யா ஹரி முதலிடம் பெற்றுள்ளார். இவர் அகில இந்திய அளவில் 7-வது இடம் பிடித்துள்ளார்.

71] செய்திதுளிகள்

.

01) அமெரிக்காவின் தேசிய விலங்காக காட்டெருமையை அந்நாட்டு அறிவித்துள்ளது.

.

02) சிங்கப்பூரில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முரளிபிள்ளை சிங்கப்பூர் பாராளுமன்றத்துக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

.

03) இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் பதவியை சஷாங்க் மனோகர் ராஜினாமா செய்துள்ளார்.

.

04) பொருளாதார நிபுணரான என்.கே.சிங்கிற்கு ஜப்பான் ஜப்பான் நாட்டின் 2-வது மிக உயரிய தேசிய விருதான 'The Order of the Rising Sun, Gold and Silver Star' விருது வழங்கப்பட உள்ளது.

72] குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பது பற்றிய தெற்காசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான நான்காவது மாநாடு { The fourth edition South Asia Initiative to End Violence Against Children (SAIEVAC) } புதுடில்லியில் மே09 முதல் 11வரை நடைபெறுகிறது.

73] சக்கரவியுகம் - 2 (Chakravyuh - 2)

****

.

இந்திய ராணுவம், ராஜஸ்தான் மாநிலம் சூரத்கார் (Suratgarh) பகுதியில் சக்கரவியுகம் - 2 (Chakravyuh - 2) என்ற தயார்நிலை பயிற்சியை மே 10 முதல் துவக்கியுள்ளது.

.

இதற்கு முன் கடந்த ஏப்ரல் மாதம் ராஜஸ்தான் மாநிலம் ஜைசல்மார் நகருக்கு அருகில் Shatrujeet என்ற தயார்நிலை பயிற்சியில் இந்திய ராணுவம் ஈடுபட்டுள்ளது.

.

.

தேர்வர்கள், ராணுவ பயிற்சியின் பெயரோடு கூடுதலாக அது நடைபெற்ற இடத்தையும் சேர்த்து ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

74] நடப்பு நிகழ்வு வினாக்கள் மற்றும் விடைகள்

==========

1) 2016 ஆண்டின் பால் அண்ட் டெய்சி விருது - யாருக்கு வழங்கப்பட்டது?

2) மகாராஷ்டிரா மாநிலத்தில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ள லத்தூர் பகுதிக்கு ராஜஸ்தானின் மிராஜ் பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டும் செல்லும் இரயில் பெயர் என்ன?

3) தற்போது சர்வதேச நிதி செலவாணியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றில் 189 வது நாடாக இணைந்த நாடு எது?

4) நேபாள நாட்டில் முதல் முதலாக உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி யார்?

5) ஏப்ரல் மாதம் அமெரிக்க அதிபர் ஒபாமா அவர்கள் யாரை அமெரிக்க தேசிய சைபர் பாதுகாப்பு அதிகரிப்பு ஆணையத்தின் உறுப்பினராக நியமித்துள்ளார்?

6) ஆட்டிஸம் குறைபாடுகள் குறைந்தபட்சம் எத்தனை சதவீதம் உள்ளவர்களை மாற்றுத்திறனாளிகளாக கருத வேண்டும் என்று மத்திய சமூக நீதிமன்றம் மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம் முடிவு செய்துள்ளது?

7) National Monument Authority - ன் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

8) ஓய்வு பெற்ற ஏர் மார்ஷல் அர்ஜீன் சிங்கை கவுரவிக்கும் விதமாக எந்த மாநிலத்தில் உள்ள விமானப்படை தளத்துக்கு அர்ஜீன் சிங் விமானபடைத்தளம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது?

9) 25 வது சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கி கோப்பையை வென்ற அணி எது?

10) முதன் முறையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பெண்களுக்கான கருத்தடை உறையின் பெயர் யாது?

11) சர்வதேச இணைப்பு குறியீடு (Global Connectivity Index) பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ள இடம் எது?

12) கப்பல்களை தாக்கும் வலிமையுள்ள ZARB என்ற ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்த நாடு எது?

13) ஐ.நா வின் தொழில்துறை வளர்ச்சி அமைப்பில், உலகின் பெரிய உற்பத்தியாளர்கள் பட்டியலில் இந்தியாவுக்கு எத்தனையாவது இடத்தை அளித்துள்ளது?

14) தேசிய குடும்பக் கட்டுப்பாடு உச்சி மாநாடு (The National Summit on Family Planning) - நடைபெற்ற இடம் எது?

15) SAWEN என்ற அமைப்பில் 8 வது உறுப்பு நாடாக இணைந்த நாடு எது?

16) இந்திய தடகள சம்மேளத்தின் தலைவராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

17) தீர், சுஜாதா என்ற போர்க்கப்பல் மற்றும் கடலோர காவல்படை கண்காணிப்பு கப்பலான வருணா ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள முதலாவது பயிற்சி வீர்ர்களுக்கு இலங்கை கடல் பகுதியில் அளிக்கப்பட்ட பயிற்சி திட்டத்தின் பெயர் யாது?

18) ஷேக்ஸ்பியர் மரணம் அடைந்து 400 ஆண்டுகள் ஆனதையொட்டி எந்த நாட்டின் தபால்துறையானது நினைவு தபால்தலையை வெளியிட்டுள்ளது?

19) சிக்கிம் மாநிலத்தில் உள்ள National Institute of Technology - ல் அமைக்கப்பட்டுள்ள சூப்பர் கம்யூட்டரின் பெயர் யாது?

20) பீமாராவ் அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா - என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?

21) இந்திய இராணுவம் இராஜஸ்தான் மாநிலத்தில் ஈடுபடுபட்டு வந்த தயார்நிலை பயிற்சி திட்டத்தின் பெயர் யாது?

22) நடைபெறவுள்ள ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள முதல் ஜிம்னாஸ்டிக் இந்திய வீராங்கனை யார்?

23) யோகா, தியானம் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக மத்திய அறிவியல் தொழிநுட்ப அமைச்சகம் அறிவித்துள்ள திட்டம் எது?

24) உலகின் சிறந்த சொகுசு இரயில்கள் பட்டியலில் தொடர்ந்து 4 வது ஆண்டாக இடம்பெற்றுள்ள இந்திய இரயில் எது?

25) விளையாட்டின் ஆஸ்கர் என அழைக்கப்படும் லாரஸ் விருதுக்கு 2016 ஆண்டின் சிறந்த வீர்ராக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

26) விளையாட்டின் ஆஸ்கர் என அழைக்கப்படும் லாரஸ் விருதுக்கு 2016 ஆண்டின் சிறந்த வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

27) முதன் முதலில் விண்வெளியில் கருமுட்டையை வளரச் செய்து சாதனை படைத்த நாடு எது? அந்த விண்கலத்தின் பெயர் யாது?

28) 2016 ஆண்டின் புலிட்சர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

29) இந்திய கிரிக்கெட் வாரியத்தின் முதல் தலைமை செயல் அதிகாரி (CEO) யார்?

30) மத்திய ஆப்பிரிக்க நாடான சாத் நாட்டின் அமெரிக்க தூதராக எந்த இந்திய வம்சாவளியை ஒபாமா அவர்கள் நியமனம் செய்ய உத்தரவிட்டுள்ளார்?

31) மத்திய பங்கு விலக்கல் துறையை (Disinvestment Department) தற்போது மத்திய அரசானது எந்த பெயரால் மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது?

32) மலேரியா மற்றும் கொசுவினால் ஏற்படும் நோய்களில் இருந்து முற்றிலும் விடுபட்ட பகுதியாக தற்போது உலக சுகாதர அமைப்பானது எந்த நாட்டை அறிவித்துள்ளது?

33) உலக பத்திரிக்கை சுதந்திர குறியீட்டு எண் (World Press Freedom Index) பட்டியலில் இந்தியாவானது எத்தனையாவது இடத்தை பெற்றுள்ளது?

34) கோவா மாநில லோக் ஆயுக்தா நீதிபதியாக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

35) சர்வதேச ஹாக்கி போட்டிகளுக்கான நடுவராக யாரை நியமித்து சர்வதேச ஹாக்கி சம்மேளம் உத்தரவிட்டுள்ளது?

36) ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அமைப்பின் 14 வது மாநாடு ஏப்ரல் 19-ல் எங்கு நடைபெற்று முடிந்தது?

37) ராமச்சந்திர பண்டாரங் தோப் (தாத்யா தோப்) அவர்களின் தியாகத்தை போற்றும் வகையில் மத்திய அரசானது எந்த மதிப்பிலான நாணயங்களை வெளியிட்டுள்ளது?

38) 2016 ஆண்டின் ரன்ஸ்டன் விருது பெற்ற நிறுவனம் எது?

39) வேளாண்மை குறித்து அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்ள மத்திய அரசால் வெளியிடப்பட்ட இணையதளம் எது?

40) உலக புவி நாள் கொண்டாடப்படும் நாள் எது?

41) இதய மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு உதவும் வகையில், இதயத்துக்கு இரத்தத்தை செலுத்தும் புதிய கருவியான Left Ventricular Assist Device - என்ற கருவியை எந்த விண்வெளி மைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்?

42) கடலுக்கு அடியில் செல்லும் முதல் புல்லட் இரயிலானது எந்த இரு இடங்களுக்கு இடையே அமைய உள்ளது?

43) மகாராஷ்டிரா மாநிலத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள எந்த இரு கிராமங்களை திரைப்பட நடிகர் அமீர்கான் அவர்கள் தத்தெடுப்பதாக தெரிவித்துள்ளார்?

44) ஏப்ரல் 21 அன்று ந்டைபெற்ற 10 வது சிவில் சர்வீஸ் தினத்தில் தூய்மை இந்தியா திட்டத்திற்காக விருது பெற்ற மாநிலம் எது?

45) 10 வது சிவில் சர்வீஸ் தினத்தில் பிரதமர் மோடி அவர்கள் வெளியிட்ட 3 புத்தகங்கள் எது?

46) AN UNDOCUMENTED WONDER - THE MAKING OF THE GREAT INDIAN ELECTION - என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

47) ஏப்ரல் 22 அன்று பாரீஸ்சில் நடைபெற்ற பருவநிலை ஒப்பந்தத்தில் புவியின் வெப்பநிலை உயர்வானது எத்தனை செல்சியத்திற்கு மிகாமல் கட்டுப்படுத்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

48) சேவைத்துறையில் மிக வேகமான வளர்ச்சி கண்டு வரும் நாடுகளில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

49) Exercise Nomadic Elephant - என்பது எந்த இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் இராணுவ பயிற்சி ஆகும்?

50) 11 வது Exercise Nomadic Elephant என்ற இராணுவ பயிற்சி நடைபெற்ற இடம் எது?

51) உலக மலேரியா தினம் கொண்டாடப்படும் நாள் எது?

52) நடக்க இருக்கும் ரியோ டி ஜெனீரோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்க இருக்கும் ஒரே துடுப்பு படகு வீரர் யார்?

53) 2016 ஆண்டின் ஆசியாவின் இதயம் மாநாடு நடைபெற்ற இடம் எது?

54) பெண்களுக்கான வில்வித்தை போட்டியில் உலக சாதனையை சமன் செய்த இந்திய வில்வித்தை வீராங்கனை யார்?

55) Ameason நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியின் பிரேத்யேக குழுவில் அமேசான் இந்திய பிரிவின் நிர்வாக இயக்குநராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

56) IRNSS - 1G என்ற செயற்கைகோளானது எந்த இராக்கெட் மூலம் அனுப்பப்பட்டது? அந்த செயற்கை கோளின் மொத்த ஆயுட்காலம் யாது?

57) இந்தியா மற்றும் தாய்லாந்து கடலோர காவல் படைகள் இணைந்து மேற்கொள்ளும் 22 வது CORPAT ரோந்து பயிற்சியானது நடைபெற்ற இடம் எது?

58) E - VOTER என்னும் அலைபேசி செயலியை வெளியிட்டுள்ள மாநிலம் எது?

59) INS அரிஹந்த் நீர் மூழ்கி கப்பலில் இருந்து ஏப்ரல் 14 அன்று இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்த அணுகுண்டை தாங்கி செல்லும் ஏவுகணையின் பெயர் யாது?

60) பாபுவா நியு கினியா நாட்டின், வெஸ்ட் நியு பிரிட்டன் மாகாணத்தின் கவர்னராக தமிழகத்தை சேர்ந்த யார் தற்போது பதவியேற்றுள்ளார்?

.

விடைகள் :-

###########

.

1) துர்க்கா தாக்ரல் (இந்திய வம்சாவளி மாணவி)

2) JALDOOT - ஜல் தூத்

3) பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள The Republic of Nauru என்ற நாடு

4) சுசிலா கார்கி

5) இந்திய அமெரிக்க மாஸ்டர் கார்டு நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அஜய் பங்கா

6) 40%

7) திருமதி.சுஷ்மிதா பாண்டே

8) மேற்கு வங்கம் - பனகார் விமானபடைத்தளம்

9) ஆஸ்திரேலிய அணி (எதிரணி - இந்தியா)

10) VelVet

11) 44 வது இடம் (அமெரிக்கா முதல் இடம்)

12) பாகிஸ்தான்

13) 6 வது இடம் (இதற்கு முன் 9 வது இடத்தில் இருந்தது)

14) புது டெல்லி (ஏப்ரல் 04 & 05)

15) இந்தியா (மற்ற நாடுகள் - மாலத்தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், பங்காளதேஷ், நேபாள், பூடான், ஆப்கானிஸ்தான்)

16) அடில்லே சுமரிவள்ள

17) PASSEX - 2016

18) பிரிட்டன் தபால்துறை

19) PARAM KANCHENJUNGA - பரம் கஞ்சன்சுங்கா

20) ஜார்க்கண்ட்

21) Shatrujeet (ராஜஸ்தான் - ஜைசல்மார் நகருக்கு அருகில்)

22) தீபா கம்ராகர்

23) சத்யம் திட்டம்

24) மகாராஜா எக்ஸ்பிரஸ்

25) ஜோகோவிச் (செர்பிய வீரர்)

26) செரினா வில்லியம்ஸ்

27) சீனா - SJ - 10 விண்கலம் (எலிகளின் 6000 கருமுட்டைகள்)

28) நியுயார்க் டைம்ஸ் மற்றும் தாம்சன் ராய்ட்டர்

29) திரு.ராகுல் ஜோஹ்ரி

30) கீதா பாசி

31) முதலீடு - பொது சொத்து மேலாண்மைத்துறை

32) ஐரோப்பா

33) 133 வது இடம் (கடந்த ஆண்டு 136 வது இடம்)

34) நீதியரசர் P.K.மிஸ்ரா

35) துர்கா தாகுர்

36) மாஸ்கோ

37) ரூ.200 மற்றும் ரூ.10

38) கூகுள் இந்தியா

39) தி அக்ரி ஹப் (தி அக்ரி ஹப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி - ராஜீப் குமார் ராய்)

40) ஏப்ரல் 22 (Theme - Tress for the earth)

41) விக்ரம் சாராபாய் விண்வெளி மைய விஞ்ஞானிகள்

42) மும்பை - ஆமதாபாத் (508 KM)

43) தால் மற்றும் கோரகோவ்

44) பீகானீர் மற்றும் சிக்கிம்

45) The Change Makers, Transforming India மற்றும் Recreating Excellence

46) முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் திரு.S.Y. குரேஷி

47) 2 டிகிரி செல்சியஷ்

48) 2 வது இடம்

49) இந்தியா மற்றும் மங்கோலியா

50) மங்கோலியா

51) ஏப்ரல் 25 (Theme - End Malaria for good)

52) டத்து பாபன் போகனல்

53) இந்தியா - டெல்லி

54) தீபிகா குமாரி

55) அமித் அகர்வால்

56) PSLV C - 33 ; 12 ஆண்டுகள்

57) அந்தமான் கடற்கரை

58) கேரளா மாநிலம்

59) K - 4 ஏவுகணை

60) சுசீந்திரன் முத்துவேல்

75] மே - 10 உலக புலம் பெயர்ந்த பறவைகள் தினம் (World Migratory Bird Day)

கருப்பொருள் (Theme) 2016 : Stop the Illegal Killing, Taking and Trade of Migratory Birds

.

மே - 11 தேசிய தொழில்நுட்ப தினம் (National Technology Day)

கருப்பொருள் (Theme) 2016 : Technology enablers of Startup India

76] INDIA Vs PAKISTAN

.

பாகிஸ்தானை சேர்ந்த Husain Haqqani இந்த புத்தகத்தை எழுதியுள்ளார். இவர் பாகிஸ்தான் நாட்டின் சார்பில் அமெரிக்காவுக்கான தூதராக பணிபுரிந்தவர். இந்த புத்தகம் அடுத்த வாரம் வெளிவரவுள்ளது.

77] செய்திதுளிகள்

---

01) தெலுங்கானா மாநில அரசு குரங்கள் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையத்தை (Monkey Rescue and Rehabilitation Centre) அடிலாபாத் மாவட்டத்தில் அமைக்கவுள்ளது.

02) Hybrid Toilet Comlexes அமைப்பதற்கு ஒடிஷா மாநில அரசு, Sulabh International Social Service Organisation (SISSO) அமைப்புடன் புரிந்துணவு ஒப்பந்தம் செய்துள்ளது.

Hybrid Toilet Comlexes என்பது கழிவறை, குளியலறை, மற்றும் துணிகள் சலவை செய்யும் வசதியுடன் அமைந்து இருக்கும்.

03) உள்ளூர் மக்கள் சூதாட்ட விடுதிகளில் (CASINO) நுழைவதற்கு கோவா மாநில அரசு தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது.

04) பல்கலைக்கழங்களில் யோகாவை கற்று கொடுப்பது பற்றிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை அளிப்பதற்கு அமைக்கப்பட்ட கமிட்டியின் தலைவர் - பேராசிரியர் H. R. நாகேந்திரா.

05) பிரகாஷ் குல்கர்னி எழுதிய COW AND COMPANY என்னும் நகைச்சுவை புத்தகத்திற்கு 2016ம் ஆண்டுக்கான REGIONAL COMMONWEALTH SHORT STORY PRIZE (ஆசியா கண்ட அளவில்) வழங்கப்பட்டுளளது.

06) மே 08ல் இந்தியாவின் முதலாவது சர்வதேச விளையாட்டு கண்காட்சி புனே நகரில் துவங்கியுள்ளது.

78] ஆந்திரா மாநில அரசின் Harita - Priya (Harmonized Information of Agriculture, Revenue and Irrigation for a Transformation Agenda - Precision Technology for Agriculture) என்னும் விவசாய திட்டம், மின்னணு விவசாய பிரிவில் (e - agriculture) World Summit on the Information Society (WSIS) 2016ன் பரிசு பெற்றுள்ளது.

79] மத்திய பிரதேச மாநிலத்தின் சுற்றுலாத்துறை, Lonely Planet Group வழங்கும் Best Indian Destination for Wildlife Award. பெற்றுள்ளது.

80] மே - 29 அன்று நாகாலாந்து மாநிலத்தின் தலைநகர் கோஹிமா, புகை(யிலை) இல்லா நகரமாக (SMOKE FREE CITY) அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் சண்டிகர், கோட்டயம், சிம்லா ஆகியவை புகை(யிலை) இல்லா நகரமாக (SMOKE FREE CITY) அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சிக்கிம் மற்றும் ஹிமாசல பிரதேசம் ஆகியவை புகை(யிலை) இல்லா மாநிலமாக (SMOKE FREE STATE) அறிவிக்கப்பட்டுள்ளது.

2014ம் ஆண்டு நாகலாந்தின் கரிபமா (GARIPHEMA) கிராமம் புகை(யிலை) இல்லா கிராமமாக (SMOKE FREE VILLEGE) அறிவிக்கப்பட்டுள்ளது.

81] ரி யோடி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் நல்லெண்ண தூதராக இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே சல்மான் கான், சச்சின் டெண்டுல்கர், அபினவ் பிந்ரா ஆகியோர் நல்லெண்ண தூதர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

82] 2016 Texas Elementary Teacher of the Year

==========

.

அமெரிக்காவில் வசிக்கும் தமிழ்ப்பெண் ரேவதி பாலகிருஷ்ணன் டெக்சாஸ் மாகாணத்தின் 2016ம் ஆண்டுக்கான சிறந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர் விருது பெற்றுள்ளார்.

83] மே 12 - உலக செவிலியர் தினம் / World Nurses Day

.

கருப்பொருள் (Theme) 2016 - Nurses: A Force for Change: Improving health systems' resilience

.

" கை விளக்கு ஏந்திய காரிகை " என புகழப்பட்ட பிளாரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த தினமே உலக செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

84] பசுமை சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் ஆக்ரா (தாஜ்மாகால்) முதல் எட்டவா (Etawah) நகர் வரை (சிங்கங்கள் வசிக்கும் காடு) 155 கிலோ மீட்டர் தூரத்திற்கு சைக்கிள் நெடுஞ்சாலை (BICYCLE HIGHWAY) அமைக்க உ.பி. அரசு முடிவு செய்துள்ளது.

85] டெல்லியில் டீசல் கார்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், வாடகை கார்கள் உரிமையாளர்கள் மற்றும் இதர வாகனங்களின் உரிமையாளர்களுக்கான கொள்கை முடிவுகளை பரிந்துரை செய்வதற்கு மத்திய தரைவழி போக்குவரத்து செயலாளர் சஞ்சய் மித்ரா IAS தலைமையில் மூவர் குழுவை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

86] சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக, சமீபத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் பதவியை ராஜினாமா செய்த ஷஷாங் மனோகர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

87] உலகில் உள்ள நகரங்களில் காற்றின் தரம் குறித்த புள்ளிவிவர அறிக்கையை, உலக சுகாதார நிறுவனம் நேற்று வெளியிட்டது. மொத்தம் 103 நாடுகளில் உள்ள 3000 நகரங்களில் உள்ள காற்றின் தரம் குறித்து ஆய்வு செய்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஈரான் நாட்டின் ஸபோல் நகரம்தான் உலகிலேயே சுற்றுச் சூழல் அதிகமாக பாதிக்கப்பட்ட நகரம் என்று தெரிய வந்துள்ளது.

அதற்கடுத்து இந்தியாவின் குவாலியர் மற்றும் அலகாபாத் ஆகிய நகரங்கள் முறையே 2-வது, 3-வது இடத்தை பிடித்துள்ளன. தவிர பாட்னா 6-வது இடத்திலும் ராய்ப்பூர் 7-வது இடத்திலும் உள்ளன. அதிக மாசடைந்த முதல் 10 நகரங்களில் இந்தியாவின் 4 நகரங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், முதல் 20 நகரங்களில் 10 மாசடைந்த நகரங்கள் இந்தியாவில்தான் உள்ளன.

அதிக காற்று மாசடைந்த நகர மாக கூறப்பட்டு வரும் டெல்லி, இந்தப் பட்டியலில் 11-வது இடத் துக்கு வந்துள்ளது. இதன்மூலம் உலகின் சுற்றுச்சூழல் அதிகம் மாசடைந்த நகரங்களில் இனி டெல்லி முன்னணி பட்டியலில் இருக்காது.

காற்றில் உள்ள தூசி, புகை போன்றவற்றின் அளவை கணக் கில் கொண்டு 'PM 2.5' 'PM 10' என்று 2 வகையாக காற்றின்தரத்தை நிர்ணயிக்கின்றனர். அதன்படி, பிஎம் 2.5 அளவில் டெல்லி 11-வது இடத்தையும், பிஎம் 10 அளவில் 25-வது இடத்தையும் டெல்லி பிடித்துள்ளது.

கடந்த 2014-ம் ஆண்டு உலகின் மிக அதிகமாக காற்று மாசுப்பாடு நிறைந்த நகரமாக டெல்லியை உலக சுகாதார நிறுவனம் அறிவித் திருந்தது. அதன்பின், இந்தளவுக்கு காற்றின் தரம் உயர்ந்துள்ளது. கடந்த முறை 1600 நகரங்களில் மட்டும்தான் ஆய்வு நடத்தப்பட்டது. இந்த முறை கூடுதலாக 1400 சேர்த்து மொத்தமாக 3000 நகரங்க ளில் காற்றின் தரத்தை ஆய்வு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

88] தேசிய பங்குச் சந்தையின் (NSE) தலைவராக அசோக் சாவ்லா நியமிக்கப்பட்டிருக்கிறார். 2019-ம் ஆண்டு மார்ச் 27-ம் தேதி வரை இந்த பதவியில் இருப்பார்.

முன்னதாக இவர் போட்டி ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக (CCI) பதவி வகித்துள்ளார்.

அசோக் சாவ்லாவுக்கு முன்பு NSEயின் தலைவராக எஸ்பி. மாத்தூர் இருந்தார்

89] பிரேசில் வரவு செலவு கணக்கில் அந்நாட்டு அதிபர் தில்மா ரூசெப் போலியான புள்ளிவிவரங்களை பதிவு செய்து நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருக்கிறது என்று தவறான தகவல்களை தந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பிரேசில் அதிபர் தில்மா ரூசெப் நேற்று தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து துணை அதிபர் மைக்கேல் டேமர் இடைக்கால அதிபராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

கடந்த 2011-ல் அந்த நாட்டின் முதல் பெண் அதிபராக தில்மா தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2015-ல் நடந்த அதிபர் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்று மீண்டும் அதிபராக பதவியேற்றார்

90] இந்திய வம்சாவளி பொறியாளர் மஞ்சித் சிங், அமெரிக்க ஜனாதிபதியின் நம்பிக்கைசார்ந்த அக்கம்பக்கத்து உறவு ஆலோசனை குழுவின உறுப்பினராக { Member of President's Advisory Council on Faith - Based and Neighborhood Partnerships } அமெரிக்க அதிபர் ஒபாமாவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

91] சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) கிரிக்கெட் குழுத் தலைவராக, இந்திய அணியின் முன்னாள் கேப்டன் அனில் கும்ப்ளே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அனில் கும்ப்ளே, தற்போது மீண்டும் அந்தப் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அந்தக் குழுவுக்கான தலைவராக வரும் 2018ஆம் ஆண்டு வரையில் அவர் நீட்டிப்பார்.

.

இந்திய அணியின் மற்றொரு முன்னாள் கேப்டனான ராகுல் திராவிட், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) கிரிக்கெட் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

92] 01) Pradhan Mantri Fasal Bima Yojana எதனுடன் தொடர்புடையது?

02) குற்றச்செயல்களில் ஈடுபடும் இளஞ்சிறுவர்களின் வயது 18-லிருந்து எத்தனை வயதாக குறைக்கப்பட்டுள்ளது?

03) இந்திராகாந்தி விலங்கியல் பூங்கா அமைந்துள்ள இடம் எது?

04) 2016-ம் ஆண்டின் இந்தியாவால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் செயற்கைகோள் எது? எந்த ராக்கெட் மூலம் அனுப்பப்பட்டது ? எங்கிருந்து ஏவப்பட்டது ?

05) வரி வசூலிப்பதை துரிதப்படுத்துவதற்கென டெல்லி அரசால் அறிமுகம் செய்யப்பட்ட App பெயர் என்ன?

06) சுற்றுலா பார்க்க வருபவர்களுக்கென Heli - Taxi அறிமுகம் செய்த இந்திய மாநிலம்?

07) டைட்டன் அறிமுகப்படுத்திய புதிய Smart Watch-ன் பெயர் என்ன ?

08) இந்தியா சமீபத்தில் ஒரு ஆம்புலன்ஸ் மற்றும் எட்டு பஸ்களை எந்த நாட்டிற்கு நன்கொடையாக வழங்கியது?

09) தேர்ந்தெடுக்கப்பட்ட 20 Smart Cityகளில் தலைநகரங்கள் மொத்தம் எத்தனை?

10) ஜனவரி 28, 2016-ல் யாருடைய 150-ஆவது பிறந்த தினம் அனுசரிக்கப்பட்டது?

11) இந்தியன் இரயில்வே, ஒரு பயணாளி ஒரு மாதத்திற்கு எத்தனை முறை e டிக்கெட் பதிவு செய்யலாம் என அறிவித்துள்ளது ? இதற்கு முன்னர் எத்தனை முறை அனுமதிக்கப்பட்டு இருந்தது?

12) உலகத்தில் காசநோயால் அதிகபேர் பாதிப்புக்குளான நாடு?

13) ஆகாஷ் ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்ட இடம் எது ?

14) சமீபத்தில் மரணமடைந்த முன்னாள் ராணுவ தளபதி யார்?

15) Fare lock வசதியை அறிமுகம் செய்த விமான நிறுவனம் எது?

16) சமூக நீதிக்கான K.வீரமணி விருது 2015 பெற்றவர் யார்?

.

விடைகள்

.

01) பயிர் காப்பீட்டுத் திட்டம்

02) 16 வயது

03) விசாகப்பட்டினம்

04) IRNSS 1E செயற்கைகோள் ..., PSLV C-31 ராக்கெட் ... ஸ்ரீஹரிகோட்டா

05) DVAT Bill

06) உத்தரகாண்ட்

07) JUXT

08) நேபாளம்

09) 5

10) லாலா லஜபதி ராய்

11) தற்போது 6 முறை ... இதற்குமுன் 10 முறை

12) இந்தியா

13) ஒடிஷா மாநிலம், பாலாசூர்

14) K.V. கிருஷ்ணா ராவ்

15) ஜெட் ஏர்வேஸ்

16) பீகார் முதல்வர் நிதிஷ்குமார்

93] சர்வதேச அமைப்புகளின் வேண்டுகோளை ஏற்று, கென்யா தங்கள் நாட்டில் உள்ள உலகின் மிகப்பெரிய அகதிகள் முகாமான Dadaab அகதிகள் முகாமை மூடுவதாக அறிவித்துள்ளது.

சோமாலிய உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக Dadaab அகதிகள் முகாம் 1991ல் திறக்கப்பட்டது. இந்த முகாமில் சுமார் 3,30,000 சோமாலியா அகதிகள் வசிக்கின்றார்கள்.

94] உக்ரைன் நாட்டில் உருவாக்கப்பட்ட 'ஆன்டனோவ்-ஏ.என் 225' ரக விமானம் தான் தற்போது உலகின் மிகப் பெரிய சரக்கு விமானம் என பெயரெடுத்துள்ளது.

செக் குடியரசின் தலைநகரான பராக்வேயில் இருந்து புறப்பட்டு மேற்கு ஆஸ்திரேலியாவில் சரக்குகளை இறக்குவதற்காக துர்க்மெனிஸ்தான், மலேஷியா வான் வழியாக பறந்த இந்த விமானம்வழியில் எரிபொருள் நிரப்புவதற்காக மே 13 அன்று ஹைதராபாத் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

'ம்ரியா' என செல்லமாக இந்த விமானம் அழைக்கப்படுகிறது. இதற்கு உக்ரைன் மொழியில் கனவு என்று அர்த்தம்.

95] Politics of the United Nations Peacekeeping Operations.

எழுதியவர் - Yeshi Choedon

96] SPICES MUSEUM

""

இந்தியாவிலேயே முதன் முதலாக நறுமணப் பொருட்கள் (மசாலா பொருட்கள்) அருங்காட்சியகம், கொச்சிக்கு அருகே வில்லிங்டன் தீவில் (Willingdon Island) அமைக்கப்படும் என இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் (Spices Board of India) அறிவித்துள்ளது.

97] ஐ.நா.வின் அமைதி காக்கும் பணியின்போது உயிர் தியாகம் செய்த நான்கு இந்திய வீரர்கள் மற்றும் ஒரு தொண்டு நிறுவன ஊழியர் உட்பட 129 பேருக்கு ஐ.நா.வின் Dag Hammarskjöld பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கோ நாட்டில் பணியாற்றிய சுப்கரண் யாதவ் & மணிஷ் மாலிக், தெற்கு சூடானில் பணியாற்றிய அமல் தேக்கா & ராகேஷ் குமார் மற்றும் பஞ்சாப் மாநிலத் தைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தை சேர்ந்த ககன் என மொத்தம் ஐந்து இந்தியர்களுக்கு மரணத்திற்கு பிந்தைய விருதாக Dag Hammarskjöld பதக்கம் வழங்கப்படுகிறது.

மே 19-ம் தேதி ஐ.நா.வின் அமைதி காப்பாளர்களுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது. அப்போது இந்த பதக்கங்களை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வழங்குகிறார்.

98] நடப்பு நிகழ்வுகள் வினா / விடை
==========
.

01) எட்டு வடகிழக்கு மாநிலங்களின் சுகாதார மேம்பாட்டுக்கு மத்திய குடும்பநலம் மற்றும் சுகாதார துறை அமைச்சகம் துவங்கியுள்ள திட்டத்தின் பெயர் என்ன ?

02) உலகிலேயே முதன்முறையாக வயதுவந்தோருக்கான பொழுதுபோக்கு பூங்கா துவங்கப்பட்டுள்ள நாடு எது ? (world's first strictly adults-only sex-themed amusement park)

03) பெண் குழந்தைகள பாதுகாப்பிற்கு ராஜஸ்தான் மாநில அரசு தொடங்கிய திட்டம் எது?

04) Pearls Agrotech Corporation Ltd (PACL) நிறுவனத்தின் சொத்துக்களை விற்று, இந்நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களுக்கு (ரூ.49,000 கோடி) திரும்பி அளிக்கும் பணியை செய்ய உச்சநீதிமன்றம் யார் தலைமையில் குழுவை நியமனம் செய்துள்ளது?

05) ஓட்டுனர் உரிமம், வாகன பதிவு சான்றிதழ் போன்றவற்றை சேமித்து வைத்துகொண்டு வாகன தணிக்கையின்போது பயன்படுத்த ஏதுவாக தெலுங்கானா மாநில அரசு வெளியிட்டுள்ள அலைபேசி செயலி (Mobile app) எது ?

06) மாற்றுத்திறனாளிகளுக்கு என தனிப்பட்ட அடையாள எண் வழங்கும் திட்டத்திற்கு மத்திய அரசு தேர்வு செய்துள்ள மாநிலம் எது?

07) 2016 UNESCO / Guillermo Cano World Press Freedom Prize வென்றவர் யார் ?

08) சிங்கப்பூரின் National Research Foundation (NRF) உதவித்தொகை பெற்ற இந்திய அறிவியல் விஞ்ஞானி யார் ?

09) உலக தடகளம் தினம் எது ?

10) பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற 2016 ஆசிய கபடி போட்டியில் (circle style) கோப்பையை வென்ற நாடு எது ?

11) BRICKS நாடுகளின் The New Development Bankவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள முதல் இந்திய வங்கி எது?

12) மங்கோலியா நாட்டின் உயரிய விருதான NORTH STAR விருது பெற்றுள்ள இரண்டு இந்தியர்கள் யார் ?

13) திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லா நகர்ப்புறங்கள் என்ற இலக்கை அக்டோபர் 02 / 2016க்குள் அடைய திட்டமிட்டு செயல்பட்டுவரும் மாநிலம் எது ?

14) மகாராஷ்டிரா மாநில அரசு, பழங்குடியினர் சாதி சான்றிதழின் validity certificateஐ onlineல் பெறுவதற்கு வெளியிட்டுள்ள அலைபேசி செயலி எது ?

15) ஒடிஷா மாநிலம், பூரி ஜெகநாதர் ஆலய புனரமைப்புக்கு ஆய்வு செய்துஉதவிய கல்வி நிறுவனம் எது?

16) இந்த ஆண்டு பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது பெற்றவர்கள் எத்தனை பேர்?

.

விடை

=======

.

01) Project Sunrise

02) பிரேசில் (Erotikaland Theme park)

03) Ashray

04) முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி R.M. லோதா குழு

05) RTA - M Wallet

06) ஹரியானா

07) Khadija Ismayilova (அசர்பைஜான் நாட்டை சேர்ந்தவர்)

08) Dr. Manvendra K Singh (U.P. State)

09) மே 07

10) பாகிஸ்தான்

11) ICICI வங்கி

12) லோகேஷ் சந்த்ரா & மன்சூர ஹைதர் (Lokesh Chandra & Mansura Haider)

13) ஆந்திரா

14) Adipraman app

15) IIT சென்னை

16) 35

99] ரோம் நகரில் நடைபெற்ற இத்தாலி ஓபன் டென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, ஸ்விட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி ரஷ்யாவின் கேத்ரினா மகரோவா, எலினா வெஸ்னினா ஜோடியை தோற்கடித்தது சாம்பியன் பட்டம் வென்றது.

இந்த ஜோடி வெல்லும் 14-வது பட்டம் இதுவாகும். சானியா ஜோடி இந்த ஆண்டில் வெல்லும் 5-வது பட்டம் இதுவாகும்.

சிவப்பு நிற களிமண் தரையில் சானியா - ஹிங்கிஸ் ஜோடி பட்டம் வெல்வது இதுவே முதன்முறை ஆகும்.

100] தொழில்முறை குத்துச்சண்டை போட்டிகளில் விளையாடி வரும் இந்திய வீரர் விஜேந்தர் சிங் தொடர்ச்சியாக தனது 6-வது ஆட்டத்திலும் நாக் அவுட் முறையில் வெற்றி பெற்றுள்ளார்.

லண்டனில் உள்ள மேக்ரான் மைதானத்தில் மே 13ல் நடைபெற்ற போட்டியில் போலந்து நாட்டை சேர்ந்த ஆன்டர்செஜ் சோல்ட்ராவை வீழ்த்தி இந்த வெற்றியை பதிவு செய்துள்ளார்.

.

இதுவரை விஜேந்தர் சிங் பெற்ற வெற்றிகள்

.

01) அக்டோபர் 10 / 2015 - பிரிட்டனின் Sonny Whiting

02) நவம்பர் 08 / 2015 - இங்கிலாந்தின் Dean Gillen

03) டிசம்பர் 20 / 2015 - பல்கேரியாவின் Samet Hyuseinov

04) மார்ச் 13 / 2016 - ஹங்கேரியின் Alexander Horvath

05) மே 02 / 2016 - பிரான்ஸின் Matiouze Royer

06) மே 13 / 2016 - போலந்தின் Andrzej Soldra

101] செய்திதுளிகள்

.

01) இந்தியாவில் உத்தரப்பிரதேசம், ஒடிசா, கர்நாடகா தமிழ்நாடு உள்ளிட்ட 4 மாநிலங்களில் மட்டுமே மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக தனித் துறைகள் செயல்பட்டு வருகின்றன என சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு தெரிவித்துள்ளது.

.

02) INTEL அறக்கட்டளையின் இளம் விஞ்ஞானி விருதுக்காக இந்திய வம்சாவளியை சேர்ந்த ஷ்யாமன்டக் பெய்ரா என்ற சிறுவன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான். போலியோவினால் பாதிக்கப் பட்டவர்கள் இயல்பாக நடப்பதற்கு உதவும் வகையில் மிக குறைந்த பொருட்செலவில் ஷ்யாமன்டக் எலெக்ட்ரானிக் கருவியை உருவாக்கியுள்ளான்.

சிறந்த விஞ்ஞான பிரிவுக்கான விருதுக்காக ராஜீவ் ஜா, மரிஸா சுமதிபலா, ஸ்வேதா ரேவனூர், தியாஷா ஜோர்தார் மற்றும் பிரசாந்த் கோடிஷாலா ஆகிய 5 இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள் தேர்வு பெற்றுள்ளனர்.

.

03) அமெரிக்காவில் அறிவியல், பொறியியல் மற்றும் கணிதவியலில் தன்னிகரற்ற சாதனை படைக்கும் விஞ்ஞானிகளுக்கு ஆண்டுதோறும் அந்நாட்டின் கவுரவமிக்க தேசிய அறிவியலுக்கான பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவின் கான்பூரில் உள்ள ஐஐடியில் படித்து பட்டம் பெற்றவர் ராகேஷ் கே.ஜெயின். தற்போது அமெரிக்காவின் ஹார்வர்டு மருத்துவ கல்லூரியில் உள்ள மசாசூசெட்ஸ் பொது மருத்துவ மனையில் கட்டிகள் தொடர்பான உயிரியல் பேராசிரியராக பணியாற்றி

வருகிறார். புற்று நோய்க்கான கீமோதெரபி மற்றும் கதிரியக்கம் சிகிச்சை மற்றும் ரத்த நாளங்களில் உருவாகும் கட்டிகள் தொடர்பாக ஆராய்ச்சி செய்து முக்கிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்துள்ளார்

ராகேஷ் கே.ஜெயின் உயிரியல் துறையில் சாதனை படைத்துள்ளதை அடுத்து அவருக்கு இந்த பதக்கம் வழங்கப்படுகிறது.

102] சர்வதேச அளவில் இலக்கியத்துக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான மேன் புக்கர் பரிசு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

2016-ம் ஆண்டுக்கான மேன் புக்கர் பரிசு தென் கொரிய எழுத்தாளர் ஹான் காங் எழுதிய THE VEGETERIAN நாவலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

103] மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் வகையில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய (ISRO) விஞ்ஞானிகள் உருவாக்கிய புதிய விண்கலம் REUSABLE LAUNCHING VECHICLE - TECHNOLOGY DEMONSTRATOR (RLV - TD) மே 23-ம் தேதி காலை விண்ணில் பாய்கிறது.

செயற்கை கோள்களை விண்ணில் செலுத்த ராக்கெட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. பல கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்படும் ராக்கெட் ஒரு முறை பயன்பாட்டுடன் முடிந்துவிடும்.

இதை தவிர்க்க மீண்டும்மீண்டும் பயன்படுத்தும் வகையில் REUSABLE LAUNCHING VECHICLE - TECHNOLOGY DEMONSTRATOR (RLV - TD) என்ற பெயரில் புதிய விண்கலத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

104] Voluntary Disclosure of Income Scheme (VDIS)

.

மத்திய அரசு பட்ஜெட்டில் அறிவித்தபடி இதுவரை வருமான வரி செலுத்தாதவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் வருமான சுய அறிவிப்புத் திட்டத்துக்கு Voluntary Disclosure of Income Scheme (VDIS) குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுவரை வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாதவர் கள் தங்களது சொத்து விவரத்தை தெரிவிக்கலாம். அந்த விவரத்தை அளித்து அதற்கு 45% வரியை செலுத்த வேண்டும். அவ்விதம் செலுத்தினால் அவர்கள் மீது எவ்வித வழக்கும் தொடரப்படாது.

வருமானம் மற்றும் சொத்து விவரத்தை முழுமையாக தாக்கல் செய்வதற்கான காலம் ஜூன் 1-ம் தேதி தொடங்குகிறது. நான்கு மாதங்கள் அதாவது 120 நாள்கள் மட்டுமே இது அமலில் இருக்கும். இந்த காலகட்டத்தில் வருமான விவரத்தைத் தாக்கல் செய்து நடவடிக்கையிலிருந்து தப்பிக்கலாம்.

.

இதே போன்று 1997ம் ஆண்டு ப.சிதம்பரம் நிதியமைச்சராக இருந்த பொழுது (தேவகௌடா ஆட்சியில்) Voluntary Disclosure Scheme (VDS) திட்டம் செயல்படுத்தப்பட்டு சுமார் 9600கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசுக்கு வருமானம் கிடைத்தது.

105] E - NIVARAN

.

வருமான வரித்துறை தற்போது இ - நிவாரண் என்ற பெயரிலான சிறப்பு மின்னணு குறை தீர்ப்பு முறையை உருவாக்கியுள்ளது.

106] உஜ்ஜைனியில் நடைபெற்ற மஹா கும்பமேளாவில் பிரதமர் மோடியும் இலங்கை அதிபர் மைத்திரி பால சிறிசேனவும் இணைந்து சிம்ஹஸ்தா பிரகடனத்தை (Simhastha Declaration) வெளியிட்டுள்ளனர்.

107] மே 19 / 2016 முதல் இலங்கையில் பெரு வெள்ள பாதிப்புகளை ஏற்படுத்திய புயல் --- ரோணு (வங்க கடலில் உருவானது)

108] 13லட்சம் பேர் பணியாற்றும் ஆயுதப்படையின் போர் திறன்களை மேம்படுத்துவதற்குரிய பரிந்துரைகளை வழங்குவதற்கும், உயர்ந்துவரும் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதிய பலன்களை சமன்படுத்துவதற்குரிய பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் D.B. ஷேகட்கர் (D.B. SHEKATKAR) தலைமையில் 11பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

109] புதுச்சேரி யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநராக, இந்தியாவின் முதல் பெண் IPS அதிகாரியாக பணியாற்றிய திருமதி. கிரண் பேடி IPS நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

110] நிதி ஆயோக் (NITI AYOG) அமைப்பின் சமூக பிரிவின் (Social Section) முதன்மை ஆலோசகராக முன்னாள் நிதித்துறை செயலாளர் Ratan P Watal நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

111] இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவராக அனுராக் தாகூர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

112] சிக்கிம் மாநில முதல்வர் பவன் குமார் சாம்லிங், நேபாள நாட்டின் உயரிய இலக்கிய விருதான YUG KAVI SIDDICHARAN விருது பெற்றுள்ளார்.

பவன் குமார் சாம்லிங் ஹிந்தி, ஆங்கிலம் , நேபாள மொழிகளில் பல நூல்களை எழுதியுள்ளார் .

113] First World Conference on Tourism for Development சீனாவின் பீஜிங்கில் மே 18 முதல் 21 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

இம்மாநாட்டின் கருப்பொருள் -- Tourism for Peace and Development

114] Centre for Environmental Health in New Delhi

,,

.

சுற்றுச்சூழல் சார்ந்த உடல் நல குறைபாடுகளை ஆய்வு செய்வதற்கான மையத்தை டெல்லியில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் துவக்கி வைத்துள்ளார்.

115] அமெரிக்காவில் உள்ள Housten பல்கலைக்கழகம் வழங்கும் Distinguished leadrship in teaching excellence விருதை இந்திய வம்சாவளி அமெரிக்க பெண் ரூபா ஐயர் பெற்றுள்ளார்.

116] கடந்த வாரம் இந்தியா வந்த ஆப்பிள் நிறுவனத்தின தலைமை செயல் அதிகாரி (CEO) டிம் குக் , ஹைதராபாத்தில் ஆப்பிள் நிறுவனத்தின் Development Officeஐ துவக்கி வைத்துள்ளார்.

.

மேலும் 2017ம் ஆண்டு ஆப்பிள் நிறுவனத்தின் iOS செயலி உருவாக்கத்திற்கான (iOS app design & development) அலுவலகம் பெங்களூருவில் துவங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

117] அமெரிக்காவைச் சார்ந்த Baker Hostetler என்ற சட்ட நிறுவனம் உலகிலேயே முதன்முதலாக ROSS என்னும் இயந்திர வக்கீலை (Robotic Lawer) பணியில் நியமித்துள்ளது.

இதை IBM நிறுவனம் தயாரித்துள்ளது.

118] ஆசிய 6 ரெட் ஸ்நூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி மலேசியாவின் கீன் ஹோ மோ வை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

6 ரெட் ஸ்நூக்கர் போட்டியில் ஆசிய சாம்பியன் பட்டம் மற்றும் உலக சாம்பியன் பட்டம் வென்ற ஒரே இந்தியர் என்ற சாதனையையும் பங்கஜ் அத்வானி படைத்துள்ளார்.

119] அஸ்ஸாம் மாநில முதல்வராக சர்பானந்தா சோனோவால் பதவியேற்றுக் கொண்டுள்ளார்.
இவருக்கு ஆளுநர் ஆச்சார்யா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

அஸ்ஸாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 126 இடங்களில் 86 இடங்களை பாஜக கூட்டணி வெற்றி பெற்று, அஸ்ஸாமில் முதல் முறையாக பாஜக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளது.

சர்பானந்தா சோனோவால் மலைஜாதி (ST) இனத்தை சேர்ந்தவராவார். இவர் பிரதமர் மோடியின் அமைச்சரவையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை இணை அமைச்சராக பதவி வகித்துள்ளார்.

இதற்குமுன் கடந்த 15 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் தருண் கோகாய் அஸ்ஸாம் முதல்வராக பதவி வகித்து வந்தார்.

120] செய்திதுளிகள்
==========

.

01) மருத்துவ சிகிச்சைக்காக பிரிட்டன் சென்ற தனக்கு அந்நாட்டு அரசு புகலிடம் அளித்துள்ளதாக மாலத்தீவு முன்னாள் அதிபர் முகமது நஷீத் அறிவித்துள்ளார்.

.

02) இரான் நாட்டில் உள்ள சபஹார் துறைமுகத்தை மேம்பாடு செய்வதற்கு இந்தியா, இரான் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

.

03) பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதால் லிபியா நாட்டுக்கு இந்தியர்கள் செல்ல மத்திய அரசு தடைவிதித்துள்ளது.

.

04) நிலநடுக்கத்தை முன்கூட்டியே கண்டறிய உதவும் ஸ்மார்ட்போன்களுக்கான புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் MY SHAKE

இதனை, பெர்க்லியில் உள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

121] சர்வதேச அமைப்பு மற்றும் தலைமையகம்:

>>

.

1. ஐக்கிய நாடுகள் அமைப்பு / United Nations Organisation ------ நியூயார்க்

2. ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் 'நிதியம் / United Nations Childrens' Fund (UNICEF) ------ நியூயார்க்

3. ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் / United Nations Population Fund (UNFPA) ------- நியூயார்க்

4. வர்த்தக மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு / United Nations Population Fund (UNCTAD) ------- ஜெனீவா

5. உலக சுகாதார அமைப்பு / World Health Organisation ------ ஜெனீவா

6. சர்வதேச தொழிலாளர் அமைப்பு / International Labour Organisation ------ ஜெனீவா

7. சர்வதேச செஞ்சிலுவை குழு / International Committee of the Red Cross ------ ஜெனீவா

8. உலக வர்த்தக அமைப்பு / World Trade Organisation ------ ஜெனீவா

9. உலக வானிலை ஆராய்ச்சி அமைப்பு / World Meteorological Organisation ------ ஜெனீவா

10. உலக நுண்ணறிவு சொத்தின் அமைப்பு / World Intellectual Property Organization ----- ஜெனீவா

11. சர்வதேச நியமங்கள் அமைப்பு / International Standards Organisation ----- ஜெனீவா

12. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு / United Nations Educational Scientific and Cultural Organisation (யுனெஸ்கோ) ------ பாரிஸ்

13. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு / Organisation for Economic Cooperation and Development (OECD) ------ பாரிஸ்

14. ஐக்கிய நாடுகள் சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு / United Nations Industrial Development Organization (UNIDO) ------------- வியன்னா

15. சர்வதேச அணுசக்தி முகமை / International Atomic Energy Agency -------- வியன்னா

16. பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு / Organisation of Petroleum Exporting Countries (OPEC) ------- வியன்னா

17. சர்வதேச நாணய நிதியம் / International Monetary Fund (IMF) ---------- வாஷிங்டன் DC

18. உலக வங்கி / World Bank ----- வாஷிங்டன் DC

19. சர்வதேச மன்னிப்பு சபை / Amnesty International --------- லண்டன்

20. சர்வதேச கடல்சார் அமைப்பு / International Maritime Organisation -------- லண்டன்

21. காமன்வெல்த் நாடுகள் / Commonwealth of Nations ---------- லண்டன்

22. சர்வதேச நீதிமன்றத்தின் / International Court Of Justice ------ ஹேக்

23. யுனிவர்சல் தபால் ஒன்றிம் / Universal Postal Union ----- பேரனே

24. உணவு மற்றும் விவசாய அமைப்பு / Food and Agricultural Organisation (FAO) -------- ரோம்

25. வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு / North Atlantic Treaty Organisation (நேட்டோ) -------- பிரஸ்ஸல்ஸ்

26. சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை / International Renewable Energy Agency ---------- அபுதாபி (அமீரகம்)

27. தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு / South Asian Association for Regional Cooperation --------- கட்மாண்டு

28. தென் கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம் / Association of South East Asian Nations (ASEAN) ---------- ஜகார்த்தா

29. ஆசியா பசிபிக் பொருளாதார அரங்கில் Asia Pacific Economic Forum (APEC) -------- சிங்கப்பூர்

30. பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்திய பெருங்கடல் ரிம் சங்கம் / Indian Ocean Rim Association for Regional Cooperation ---------- Ebene , மொரிஷியஸ்

31. இரசாயன ஆயுதங்களை தடை அமைப்பு / Organisation for the Prohibition of Chemical Weapons ---------- ஹேக் , நெதர்லாந்து

122] கர்நாடகா மாநிலம் , கொப்பல் மாவட்ட வன அதிகாரியாக பணியாற்றும் S.பிரபாகரன் IFS , எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி, எவரெஸ்டை அடைந்த முதல் இந்திய வன அலுவலர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

S. பிரபாகரன் IFS திருவண்ணாமலையைச் சேர்ந்தவர். மேட்டுப்பாளையம் வன கல்லூரியில் உயர்கல்வி பயின்றுள்ளார்.

123] அரசு விழாக்களில் பிளாஸ்டிக் பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர், ரசாயனங்கள் தடவப்பட்ட தட்டுகள் மற்றும் கரண்டிகளை பயன்படுத்த சிக்கிம் மாநில அரசு தடைவிதித்துள்ளது.

124] மத்திய மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறையின் பெயரை அதீத திறமை கொண்டவர்கள் துறை என பெயர் மாற்றம் செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளை ஹிந்தியில் விக்லாங்ஜன் என குறிப்பிடப்படுவதை இனி திவ்யாங் என குறிப்பிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

125] NERCPA -- North Easr Region Commonwealth Parlimantary Association Conference

.

எட்டு வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த (அஸ்ஸாம், மணிப்பூர், மிசோரம், மேகாலயா, சிக்கிம், திரிபுரா, நாகாலாந்து, அருணாசலப்பிரதேசம்) சட்டமன்ற சபாநாயகர்கள் மற்றும் துணை சபாநாயகர்கள் மாநாடு திரிபுரா மாநில தலைநகர் அகர்தலாவில் மே 30 முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது.

இம்மாநாட்டை மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் துவக்கி வைக்கின்றார்.

126] பிரதமர் மோடி தலைமையிலான அரசு பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி மே 26 முதல் ஜூன் 15 வரை " வளர்ச்சி திருவிழா " என்ற பெயரில் நிகழ்ச்சிகளை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

127] ஆகஸ்ட் 15 / 2016 முதல் ஒடிஷா மாநிலத்தின் ஆட்சி மொழியாக " ஒடியா " கடைபிடிக்கப்படும் என அம்மாநில முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.

128] G 7 நாடுகளின் தலைவர்கள் மாநாடு ஜப்பானின் Ise - Shima வில் மே 26 & 27 நடைபெறுகிறது.

இம் மாநாட்டில் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, கனடா ஆகிய நாடுகளின் தலைவர்களும், ஐரோப்பிய யூனியன் கமிசன் தலைவர், ஐரோப்பிய யூனியன் கவுன்சில் தலைவர் மற்றும் ஐ.நா. பொது சபை தலைவர் ஆகியயோர் கலந்து கொண்டுள்ளனர்.

129] தமிழ் நாட்டில் உள்ள மலையாளிக்கவுண்டர் , நரிக்குறவர், குருவிக்காரர் மற்றும் புதுச்சேரியின் இருளர் ஜாதிகளை பழங்குடியினர் பட்டியலில் இணைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இதுபற்றிய மசோதா நிறைவேறியபின் , ஜனாதிபதியின் ஒப்புதல் பெற்று , அரசியல் அமைப்பு சட்டத்தில் மாற்றம் செய்த பின்பு இது அமலுக்கு வரும் .

130] சௌதி அரேபியாவின் Islamic Development Bank , இந்தியாவில் தனது முதல் கிளையை குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் துவக்கவுள்ளது.

131] அமெரிக்காவின் 28வது தேசிய புவியியல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் இந்திய வம்சாவளி மாணவர்கள் வென்றுள்ளனர்.

01 -- ரிஷி நாயர், 02 -- சாகேத் ஜொன்னலகட்டா, 03 -- கபில் நாதன்

132] அமெரிக்கா & ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராணுவ ஆராய்ச்சி குழு , ஒலியின் வேகத்தைவிட ஏழு மடங்கு வேகமாக செல்லக்கூடிய " Scramjet " இன்ஜின் பொருத்தப்பட்ட ராக்கெட்டை ஆஸ்திரேலிய பாலைவனத்திலிருந்து ஏவியுள்ளனர்.

133] கௌதம புத்தரின் 2560வது பிறந்தநாள் சர்வதேச மாநாடு நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவில் மே 19 & 20ல் நடைபெற்று முடிந்துள்ளது.

134] Jal Prahar -- 2016

❦❦❦❦❦❦

இந்திய ராணுவத்தின் முப்படைகளும் இணைந்து மார்ச் 27 முதல் ஏப்ரல் 18 வரை அந்தமான் - நிகோபர் பகுதியில் Jal Prahar - 2016 என்னும் தயார்நிலை பயிற்சியில் ஈடுபட்டன.

135] 13th Tat Suraksha

◆◆◆◆◆◆◆◆◆◆

அந்தமான் - நிகோபர் தீவுகளின் கடலோர பாதுகாப்பை பலப்படுத்தும் பொருட்டு அந்தமான் - நிகோபர் மாவட்ட நிர்வாகம் , காவல் துறை, கடற்கரை காவல் துறை , கஸ்டம்ஸ், மீன்வளத்துறை , CISF, IRBn ஆகியவை இணைந்து ஏப்ரல் 5 முதல் 8 வரை 13வது Tat Suraksha என்ற பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டன.

136] மருத்துவத் துறையில் உயரிய தேசிய விருதான டாக்டர் பி.சி.ராய் விருதுக்கு (Dr. Bidhan Chandra Roy) சென்னை காது-மூக்கு-தொண்டை மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மோகன் காமேஸ்வரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிறப்புத் துறையான காது-மூக்கு-தொண்டை மருத்துவத்தை மேம்படுத்துவதில் மோகன்காமேஸ்வரன் சிறந்து விளங்கியதை அங்கீகரிக்கும் வகையில் விருது வழங்கப்பட்டுள்ளதாக இந்திய மருத்துவக்கவுன்சில் (எம்.சி.ஐ.) தலைவர் டாக்டர் ஜெஸ்ரீ மேத்தா தெரிவித்துள்ளார்.

மோகன் காமேஸ்வரின் தந்தை காமேஸ்வரன் 1981-ஆம்ஆண்டிலும், தாய் டாக்டர் லலிதா காமேஸ்வரன் 1983-ஆண்டிலும் இந்த விருதை பெற்றுள்ளனர்.

தந்தையைப் பின்பற்றி, மகனும் இந்த விருது பெற இருப்பது இதுவே முதல் முறையாகும்.

இவர்கள் இருவரும் பத்மஸ்ரீ விருதையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

137] Millennium Technology Prize முதன்முதலாக பெண் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

Technology Academy Finland (TFA) வழங்கும் 2016ம் ஆண்டிற்கான Millennium Technology Prize அமெரிக்காவைச் சேர்ந்த பயோ கெமிக்கல் இன்ஜினியரான Frances Arnoldக்கு வழங்கப்பட்டுள்ளது.

138] நிர்பயா பஸ்

★★★★★★★

ராஜஸ்தான் மாநில அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில், பெண்களுக்கான சிறப்பு பேருந்தான 20 நிர்பயா பஸ்களை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி துவக்கி வைத்துள்ளார்.

இந்த பேருந்தில் கண்காணிப்பு கேமிரா , பேனிக் பட்டன், Tracking System ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

139] கொச்சியில் உள்ள பசுமை தீர்ப்பாயத்தின் கிளை கேரளாவின் முக்கிய ஆறு நகரங்களில் (திருவனந்தபுரம், கொச்சி, கொல்லம், கோழிக்கோடு, திருச்சூர், கண்ணூர்) பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட டீசல் வாகனங்களை இயக்க தடைவிதித்துள்ளது.

140] India Biodiversity Award 2016

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அருணாச்சலபிரதேசத்தின் கிழக்கு காமேங் (East kameng) மாவட்டத்தில் அமைந்துள்ள பக்கே புலிகள் சரணாலயம் (Pakke Tiger Reserve) 2016ம் ஆண்டிற்கான இந்திய பல்லுயிர்பெருக்க விருதை (India Biodiversity Award 2016) பெற்றுள்ளது.

141] ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பான 'வாக் ப்ரீ பவுண்டேஷன்' நிறுவனம் சர்வதேச அளவில் நவீன அடிமைகள் குறித்த இந்த ஆண்டுக்கான ஆய்வறிக்கையை ‘குலோபல் ஸ்லேவரி இண்டெக்ஸ்’ என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

* உலகம் முழுவதும் பெண்கள், குழந்தைகள் உட்பட மொத்தம் 4.58 கோடி பேர் நவீன அடிமைகளாக உள்ளனர். இது கடந்த 2014-ம் ஆண்டில் 3.58 கோடியாக இருந்தது.

* அடிமைகள் அதிகம் உள்ள 167 நாடுகள் பட்டியலில் (எண்ணிக்கை அடிப்படையில்) 1.83 கோடியுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இது கடந்த 2014-ல் 1.43 கோடியாக இருந்தது.

* இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீனா (33.9 லட்சம்), பாகிஸ்தான் (21.3 லட்சம்), வங்கதேசம் (15.3 லட்சம்) மற்றும் உஸ்பெகிஸ்தான் (12.3 லட்சம்) ஆகிய ஆசிய நாடுகள் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.

* உலகில் உள்ள மொத்த நவீன அடிமைகளில் 58 சதவீதம் பேர் (2.66 கோடி) இந்த 5 நாடுகளில் உள்ளனர்.

* இந்தப் பட்டியலில் சதவீத அடிப்படையில் வடகொரியா முதலிடத்தில் உள்ளது. அதாவது, அந்நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 4.37 சதவீதம் பேர் அடிமைகளாக உள்ளனர்.

* சதவீத அடிப்படையிலான பட்டியலில், உஸ்பெக்ஸ்தான், கம்போடியா, இந்தியா மற்றும் கத்தார் ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

அடிமைகள் அதிகம் இருக்கும் நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் இருந்தாலும், அடிமைத்தனத்தை ஒழிக்க இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, ஆள் கடத்தல், அடிமைத்தனம், குழந்தை பருவ பாலியல், கட்டாய திருமணம் ஆகியவற்றை கிரிமினல் குற்றமாக அறிவித்துள்ளது.

142] வரும் ஜூன் 21-ம் தேதி 2-வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி. ஐக்கிய நாடுகள் சபையில் யோகா நிகழ்ச்சிகளை சத்குரு ஜக்கி வாசுதேவ் நடத்திக் கொடுக்கவுள்ளார்.

நடப்பாண்டு சர்வதேச யோகா தினத்தில், நீடித்த வளர்ச்சி இலக்கு மையக் கருவாக எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் சர்வதேச யோகா தினத்தில், வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ- மூன், ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், அமெரிக்க எம்.பி. துளசி கப்பார்ட் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

143] தமிழக சட்டப்பேரவை நியமன உறுப்பினராக ஆங்கிலோ இந்தியன் பிரிவைச் சேர்ந்த நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸை இரண்டாவது முறையாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளர்.

இவர் ஏற்கனவே 2011 - 16 ம் ஆண்டிலும் நியமன சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

144] இத்தாலியின் மிலன் நகரில் நடைபெற்ற சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி, அட்லெடிகோ மாட்ரிட் அணியை 5 - 3 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 11வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

145] 9வது IPL கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஹைதாரபாத் சன் ரைசர்ஸ் அணி, ராயல் சேலஞ்சர்ஸ் ஆப் பெங்களூரு அணியை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ஹைதாரபாத் சன் ரைசர்ஸ் அணி முதல்முறையாக கோப்பையை வென்றுள்ளது.

2009 மற்றும் 2011-ம் ஆண்டுகளில் இறுதிப் போட்டியில் தோல்வி கண்டிருந்த பெங்களூரு அணி, இப்போது 3-வது முறையாக தோல்வியடைந்துள்ளது.

ஹைதாரபாத் சன் ரைசர்ஸ் அணியின் கேப்டன் - டேவிட் வார்நர் (ஆஸ்திரேலியா)

ராயல் சேலஞ்சர்ஸ் ஆப் பெங்களூரு அணியின் கேப்டன் - விராத் கோலி (இந்தியா)

ஐபிஎல் தொடரில் அதிக ரன்கள் குவிக்கும் வீரருக்கு ஆரஞ்சு நிற தொப்பி வழங்கப்படுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு ஆரஞ்சு நிற தொப்பியை பெங்களூரு அணியின் கேப்டன் விராட் கோலி 4 சதம், 7 அரைசதம் உட்பட மொத்தம் 973 ரன்கள் குவித்து தட்டிச்சென்றார்.

அதிக விக்கெட்டுகள் வீழ்த்தும் பந்து வீச்சாளரை ஊதா நிற தொப்பி அலங்கரிக்கும். இந்த முறை ஐதராபாத் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் 23 விக்கெட்களுடன் ஊதா நிற தொப்பியை கைப்பற்றினார்.

ஐபிஎல் இறுதிப்போட்டியில் கிறிஸ் கெயில் 38 பந்தில் 76 ரன் எடுத்தார். இதன் மூலம் அவர் டி 20 ஆட்டங்களில் 9 ஆயிரம் ரன்களை எடுத்த முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார். 254 ஆட்டங்களில் விளையாடி உள்ள அவர் 9066 ரன்கள் குவித்துள்ளார்.

9வது IPL கிரிக்கெட் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் விருது பெற்றவர் - பென் கட்டிங்

9வது IPL கிரிக்கெட் போட்டியின் தொடர் நாயகன் விருது - விராத் கோலி

9வது IPL கிரிக்கெட் போட்டியின் சிறந்த வளர்ந்து வரும் வீரர் விருது -- முஸ்தாபிஜுர்

இந்த போட்டி தொடரில் அதிக சிக்சர் அடிதுள்ளவர் - விராத் கோலி 38 சிக்சர்கள்

சன்ரைஸர்ஸ் ஹைதராபாத் எடுத்த 208 ரன்களே, ஐபிஎல் இறுதிப் போட்டிகளில் முதலில் ஆடிய அணி எடுத்த அதிகபட்ச ஸ்கோர். இதற்கு முன் 2011 ஆண்டு சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணி முதலில் ஆடி அடித்த 205 ரன்களே அதிகபட்சமாக இருந்தது.

146] விவசாய வளர்ச்சிக்கு தேவையான நிதியை திரட்டுவதற்காக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட " கிருஷி கல்யாண் " சேவை வரி (0.5%) ஜுன் 01 முதல் அமலுக்கு வருகிறது.

தற்போது 14.5% உள்ள சேவை வரி இனி 15%ஆக இருக்கும்.

147] 2016ம் ஆண்டிற்கான ஜப்பான் நாட்டின் புகுவோகா விருதுக்கு இந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

யோகோபோடியா என்ற அமைப்பின் மூலம் ஆண்டுதோறும் கிராண்ட், அகாடமிக், கலை மற்றும் கலாச்சாரம் என 3 துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு இந்த புகுவோகா விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு இசைத் துறையில் சிறந்து விளங்குவோருக்கான புகுவோகா விருது ஏ.ஆர். ரகுமானுக்கு வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

148] மே - 31 சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம்

.

மே - 30 சர்வதேச ஐ. நா. அமைதிப்படையினர் தினம்

கருப்பொருள் (Theme) - Honouring Our Heroes

.

மே - 25 சர்வதேச காணாமல்போன குழந்தைகள் தினம் மற்றும் உலக தைராய்டு தினம்

.

மே - 22 உலக பல்லுயிர் பெருக்க தினம்

.

மே - 18 சர்வதேச அருங்காட்சியம் தினம் (Museums day)

149] சிங்கப்பூரில் வசிக்கும் இந்திய வம்சாவளிப் பெண் அதிதி கிருஷ்ணமூர்த்தி கையால் எழுதப்பட்ட Codex: The Lost Treasure Of The Indus என்னும் புத்தகம் சிங்கப்பூரின் பெருமைமிகு 2016 Scholastic Asian Book Award பெற்றுள்ளது.

150] இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா நகரின் மீது (ஆகஸ்ட் 06 /1945) Little Boy என்ற அணுகுண்டு வீசப்பட்ட பின் முதன் முறையாக மே 27 / 2016 அன்று அமெரிக்க அதிபர் (அதிபர் ஒபாமா) ஒருவர் ஹிரோஷிமா சென்றுள்ளார்.

151] பிரதமர் மோடி தலைமையிலான அரசு அமைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி ரயில்வே துறையில் நடைபெற்றுள வளர்ச்சி பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு ரயில் --- Rail Humsafar Saptaah

152] மத்திய, மாநில அரசு மருத்துவர்களின் ஓய்வு வயதை 65 ஆக அதிகரித்து மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஆணை மே 31-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

153] ரயில்களின் வேகத்தை அதிகப் படுத்தும் முயற்சியின் ஒரு பகுதி யாக, ஸ்பெயின் நிறுவனத்தின் டால்கோ ரயில் சோதனை ஓட்டம், உத்தரப்பிரதேச மாநில பரேலி - மொராதாபாத் இடையே மே 29ல் நடைபெற்றுள்ளது.

சோதனை ஓட்டம் நடைபெற்ற தொலைவு மொத்தம், 90 கிலோமீட்டர் ஆகும். 9 பெட்டிகள் கொண்ட டால்கோ ரயில் நேற்று காலை 9.05-க்கு பரேலியில் இருந்து புறப்பட்டது. 4,500 ஹெச்.பி திறன் கொண்ட டீசல் இயந்திரம் ரயில்பெட்டிகளை இழுத்துக்கொண்டு, மணிக்கு 80 முதல் 115 கிலோமீட்டர் வேகத்தில் பயணித்து, பகல் 10.15 மணிக்கு மொராதாபாத் சென்றடைந்தது.

தற்போது டெல்லி-மும்பை ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில், மணிக்கு 85 கிலோமீட்டர் வேகத்தில் மட்டுமே செல்கிறது.

154] இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் (Helmet) அணிந்து வந்தால் மட்டுமே எரிபொருள் (Petrol) வழங்கவேண்டும் என எரிபொருள் முகமைகளுக்கு (Fuel Station) ஒடிஷா மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

155] சர்வதேச அளவில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மிக இள வயதில் 10,000 ரன்களை குவித்தவர் என்ற பெருமையை சச்சின் டெண்டுகல்கரிடமிருந்து இங்கிலாந்து கேப்டன் அலாஸ்டர் குக் தட்டிச்சென்றுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் 31 ஆண்டு, 326 நாள்களில் 10, 000 ரன்களை எடுத்து இருந்தார். தற்போது இங்கிலாந்து அணியின் கேப்டன் அலாஸ்டர் குக் 31 ஆண்டு 157 நாள்களில் 10, 000 ரன்களை எட்டியுள்ளார்.